REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
2023 ஏப்ரல் 10 திங்கட்கிழமை

வரு. 91 இல. 85 | Monday 10, April, 2023 | 12பக்கங்கள் | 50/-

## இந்த ஆட்சியை எவராலும் அசைக்க முடியாது

**முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தெரிவிப்பு**



இந்த ஆட்சியை எவராலும் அசைக்க முடியாது. ஆட்சிக் கவிழ்ப்புக்கு இங்கு ஒருபோதும் இடமில்லையென ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 04

## இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு அனைவரும் ஆதரவளிக்க முன்வரவேண்டும்

**IMF இன் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைவர் பீட்டர் புரூவர் தெரிவிப்பு**



இலங்கை எதிர்கொள்ளும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து நாட்டின் பொருளாதார மீட்சிக்கு ஆதரவளித்து நிலையான மற்றும் உள்ளடக்கிய மீட்சியை ஊக்குவிக்கவேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதுக்குழுவின் தலைமை அதிகாரி பீட்டர் புரூவர் தெரிவித்துள்ளார். யூடியுப் வீடியோவில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மீட்சி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு ஊக்குவித்தல் ஆகியவை குறித்து வீடியோவில் கருத்து 04

## இலங்கையருக்கு ஜப்பானில் அதிக தொழில் வாய்ப்பு

**ஜப்பான் அரசுடன் இருதரப்பு உடன்பாடு**



ஜப்பானில் இலங்கையர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் வகையில் பயிற்சி நிலையங்களை நிறுவுதல் மற்றும் இலங்கை தொழிலாளர்களுக்கு அதிக வருமானம் ஈட்டக்கூடிய அதிக தொழில்களை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக ஜப்பானிய அரசாங்கத்துடன் இருதரப்பு உடன்பாடு 04

## உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு விரைவில் ஸ்தாபிப்பு

**தமிழ் கட்சிகள் பலவும் ஆதரவு என்கிறார் நீதியமைச்சர்**



உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தா பிப்பது குறித்து தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும், அவர்கள் இச்செயன்முறைக்கு இணங்கியிருப்பதாகவும் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இருப்பினும், வடக்கு, கிழக்கில் உள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு உள்ளடங்கலான எந்தவொரு உள்ளகப் பொறிமுறையையும் 04

## மாகாண சபைகள் கலைக்கப்பட்டு ஏழு வருடங்கள்;

# 207 சொகுசு வாகனங்களுக்கு என்ன நடந்தது?

**தற்போது அவை எங்கே? யார் பயன்படுத்துகின்றார்கள்?**

*நமது நிருபர்*



மாகாண சபைகளின் அரசியல் அதிகார சபைக்கு சொந்தமான 207 சொகுசு வாகனங்களை தற்போது யார் பயன்படுத்துகிறார்கள்? என்பது தொடர்பில் குறிப்பிட்ட தகவல்கள் எதுவும் இல்லை என தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு இது தொடர்பில் கணக்காய்வு கோருவதற்கு தயாராகி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. தகவல் அறியும் சட்டத்தின் கீழ், உரிய சொகுசு வாகனங்களை யார் பயன்படுத்துகிறார்கள், என்னென்ன கடமைகளுக்குப் பயன்படுத்துகிறார்கள் என்பது தொடர்பான தகவல்களைக் கோருவதற்கு எம்பிக்கள் குழு தயாராகி வருகிறது.

குறிப்பாக குறிப்பிட்ட சில பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கு வாகனங்கள் இல்லாத சூழ்நிலையில் இந்த விடயம் பாரதூரமானது என 04

**எந்தவித தகவல்களும் இல்லையெனத் தெரிவித்து தகவல் அறியும் சட்டத்தின் கீழ் தகவல்களை கோரத் தயாராகிறது பாராளுமன்ற உறுப்பினர் குழு**

## இந்திய அரசின் உதவித்திட்ட பஸ்கள் மத்திய மாகாணத்திற்கு

**அமைச்சர் பந்துலவினால் நேற்று வழங்கிவைப்பு**

*ஹற்றன் சுழற்சி நிருபர்*



நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்களுக்கு இந்திய அரசாங்கத்தினால் கடன் உதவித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட புதிய பஸ்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று (09) போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் நுவரெலியா கிரகரி வாவி பகுதியில் இடம்பெற்றது.

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் உள்ள ஏழு டிப்போக்களுக்கு 26 புதிய பஸ்கள் இதன்போது கையளிக்கப்பட்டன. மேலும் இந்த புதிய பஸ்களை தோட்ட மற்றும் கிராமப்புற வீதிகளில் பயணிக்கவும், அதன் மூலம் கிராமப்புற மற்றும் தோட்டப்புற மக்களுக்கு முறையான போக்குவரத்து வசதிகளை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

இந்த புதிய பஸ்கள் நுவரெலியா மாவட்டத்தில் அட்டன், நுவரெலியா, கொத்மலை, வலப்பனை, ஹங்குராங்கெத்த மற்றும் கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி மற்றும் கம்பளை ஆகிய டிப்போக்களுக்கே வழங்கப்பட்டுள்ளன. 04

## நாட்டில் தற்போது பாவனையிலுள்ள சகல இந்திய மயக்க மருந்துகள் யாவும் மீளப்பெறப்பட்டது

**தரம் தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டையடுத்து நடவடிக்கை**



தற்போது வைத்தியசாலைகளில் அறுவை சிகிச்சைக்காக பயன்படுத்தப்படும் மயக்க மருந்துகள் உடன் அமுலாகும் வகையில் பாவனையில் இருந்து மீள பெறப்பட்டுள்ளன. அதன் தரம் தொடர்பில் கிடைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்கு அமைய 04

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குறித்து மீண்டும் ஆராய்வு

**செவ்வாயன்று கூடுகிறது தேர்தல்கள் ஆணைக்குழு**



உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தும் திகதியை தீர்மானிக்கும் நோக்கில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மீண்டும் தேர்தல் ஆணைக்குழு விசேட கூட்டமொன்றை நடத்தவுள்ளது. தேர்தலை நடத்துவதற்கு நிதி வழங்குமாறு 04

## ஊழியர்களுக்கு வழங்கிய கடனால் இரு நிறுவனங்கள் கடும் நிதி நெருக்கடியில்

**கணக்காய்வாளர் அறிக்கை சுட்டிக்காட்டு**

சிலோன் பெற்றோலியம் ஸ்டோரேஜ் டெர்மினல் லிமிடெட் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஆகியவை தமது ஊழியர்கள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தாததன் விளைவாக இப்போது கடுமையான நிதி விளைவுகளை எதிர்கொள்வதாக 04

## நான்கு வருடங்களாகிறது நீதி மட்டும் கிடைக்கவில்லை

**கர்தினால் மல்கம் ரஞ்சித் கவலை**



உயிர்த்த ஞாயிறு தாக்குதலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என கர்தினால் மல்கம் ரஞ்சித் வேண்டுகோள் விடுத்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு 04

## பாரிய ரயில் விபத்தை தடுத்து நிறுத்திய நபர்

**ஹப்புத்தளையில் பொதுமகனுக்கு பாராட்டு**



பொதுமகன் ஒருவரின் முன்னெச்சரிக்கை செயற்பாட்டால், ஹப்புத்தளையில் பாரிய ரயில் அனர்த்தமொன்று தவிர்க்கப்பட்டுள்ளது. ஹப்புத்தளைக்கும் ஹிதல்கஸ்கின்னவுக்குமிடையில் மரம் ஒன்று முறிந்து 04

## புதிய பயங்கரவாத தடை சட்டத்தால் பெரும் ஆபத்து

**GSP வரிச்சலுகை இல்லாதுபோகும் என்கிறார் சுமந்திரன் MP**



ஜனநாயக ரீதியிலான போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்குவதற்காகவே புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டு வரப்படுவதாக தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், சர்வதேச சமூகத்திற்கு கொடுத்த வாக்குறுதியை மீறி புதிய சட்டத்தை கொண்டு வர முயற்சித்தால் ஜீ.எஸ்.பி வரிச்சலுகை இல்லாமல் 04

## அடுத்து வரும் ஓரிரு மாதங்களுக்குள் நாட்டில் CPC வழங்குவதை விடவும் குறைந்த விலைக்கு எரிபொருள்

**மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி**



இலங்கையின் எரிபொருள் சந்தைக்குள் பிரவேசிக்கும் மூன்று வெளிநாட்டு நிறுவனங்களுக்கு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விற்பனை செய்யும் விலையை விட குறைவான 04

## ரயில் பெட்டிகளிலிருந்து கழன்று சென்ற எஞ்சின்

**01 Km பயணித்து நின்றது**



சமுத்திராதேவி ரயிலின் இயந்திரம் ரயில் பெட்டிகளிலிருந்து 04

## திருமலை கடற்பரப்பில் USA கடற்படை கப்பல்

**எரிபொருள் நிரப்புவதற்காக நங்கூரமிடப்பட்டுள்ளது**



அமெரிக்காவின் யு.எஸ்.என்.எஸ் பிரன்சுவிக், என்ற கடற்படையின் போக்குவரத்து கப்பல் நேற்றுமுன்தினம் (08) திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்தது. அமெரிக்க கடற்படை கட்டளையின் விரைவுப் போக்குவரத்துக் கப்பலான இது, துருப்புக்கள் மற்றும் இராணுவ உபகரணங்கள், உள் திரையரங்கு மற்றும் 04

## லொத்தர் சபைக்கு 03 பில். ரூபா இலாபம்

**வரலாற்றில் முதற் தடவையாக பதிவு**

லொத்தர் சபையால் வரலாற்றில் முதல் தடவையாக 3 பில்லியன் ரூபா இலாபத்தை பதிவு செய்ய முடிந்ததாக தேசிய லொத்தர் சபையின் தலைவர் அஜித் குணரத்ன கூறியுள்ளார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற அபிவிருத்தி லொத்தர் வெற்றியாளர்களுக்கான நிதி காசோலை வழங்கும் பிரதான வைபவத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் தொற்று காரணமாக நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் சவால்களால் 04

## வீதியில் நின்ற 10 வாகனங்களை மோதி விபத்துக்குள்ளான கிரேன்

**வீடொன்றும் சேதம்; நால்வர் படுகாயம்**



பஸ்யால – மீரிகம வீதியின் கல் எலிய நகரில் நிறுத்தப்பட்டிருந்த 10 வாகனங்களோடு கிரேன் ஒன்று மோதியதுடன், அது மதில் மற்றும் கதவுகளை 04



**தொழிற்சங்க செயற்பாடு மூலம் அசௌகரியப்படுத்த வேண்டாம்**

**சுகாதா அமைச்சர் தெரிவிப்பு** 03



ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில்

# பெரும்போக நெல்லை கொள்வனவு செய்ய அரசு ரூ. 18 கோடி செலவீடு

மாவட்ட செயலாளர் எச்.பீ. சுமணசேகர தெரிவிப்பு

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்



ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெரும் போகத்தின்போது நெல்லை கொள்வனவு செய்வதற்காக இதுவரை அரசாங்கத்தினால் ரூ. 18 கோடி செலவிடப்பட்டுள்ளதாக ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளர் எச். பீ. சுமணசேகர தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நலன்புரி உதவித் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு இலவசமாக அரிசியை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவு செய்து தனியார் அரிசி ஆலைகளுக்கு வழங்கி அதனை அரிசியாக்கி ஒரு குடும்பத்திற்கு பத்து கிலோகிராம் அரிசியினை இலவசமாக வழங்குவதற்காக மேற்படி மாவட்டத்திற்கு 18 கோடி ரூபாய் நிதியொதுக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

இத்தொகைக்கு மேலதிகமாக மேலும் பத்து கோடி ரூபாய் கிடைக்கப்பெறவுள்ளதாகவும் மாவட்டசெயலாளர் தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் கொள்வனவு செய்யப்படும் நெல்லை அரிசியாக்கி ஹம்பாந்தோட்டை, காலி, மாத்தறை, களுத்துறை, கொழும்பு, கம்பஹா மற்றும் இரத்தினபுரி ஆகிய ஏழு மாவட்டங்களிலுமுள்ள வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு இலவசமாக விநியோகிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலாளர் மேலும் தெரிவித்தார்.

## நகர்வலம்

# 'கொழும்பு டைம்ஸ்' ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு

ருஸைக் பாரூக், ஏ.எஸ்.எம். ஜாவிட்





கொழும்பு டைம்ஸ் மற்றும் சவூதி அரேபியாவை தளமாகக் கொண்டு இயங்கும் 'Arab News' இணைந்து ஒழுங்கு செய்த இப்தார் வைபவம் கொழும்பில் உள்ள மன்டரினா ஹோட்டலில் நடைபெற்றது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட், பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌசி, பங்களாதேஷ், பாகிஸ்தான், துருக்கி, மலேசியா, ரஷ்யா, வியட்நாம், தாய்லாந்து, மாலைதீவு ஆகிய நாடுகளின் தூதுவர்கள் உள்ளிட்ட அதிதிகளை கொழும்பு டைம்ஸின் பிரதம ஆசிரியரும், Arab News கொழும்பு பிரதம நிருபருமான மொஹமட் ரசூல்டீன் வரவேற்றார். இந்தியா மற்றும் துபாய் தூதரக பிரதிநிதிகள் உட்பட முக்கிய பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் சவூதி அரேபிய Arab News தலைமை ஆசிரியர் பைசல் அப்பாஸின் செய்தியை ஷபானா இப்ராஹிம் வாசித்தார். பின்னர் கொழும்பு டைம்ஸ் குறுகிய காலத்தில் அடைந்த விரைவான முன்னேற்றத்தை சித்தரிக்கும் ஆவணப் படமும் இதன்போது திரையிடபட்டது.

# தேசிய வெசாக் பண்டிகை நிகழ்வுக்கு அலிசப்ரி ரஹீம் எம்.பி நிதியுதவி

கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்



தேசிய வெசாக் பண்டிகை நிகழ்வுக்காக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தனது சொந்த நிதியிலிருந்து ஏழு இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளார்.

புத்தளம் கே.ஏ. பாயிஸ் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற நோன்புப் பெருநாள் விழா தொடர்பான கூட்டத்தில் மேற்படி உதவித்தொகைக்கான காசோலையை பாராளுமன்ற உறுப்பினர் , புத்தளம் மாவட்ட செயலாளரிடம் கையளித்தார்.

தேசிய வெசாக் பண்டிகை இம்முறை புத்தளம் மாவட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறவுள்ளது. இதற்கான சகல முன் ஏற்பாடுகளும் புத்தளம் மாவட்டச் செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் , சமகாலத்தில் அத்தியாவசிய தேவைகளுக்கு மட்டும் அரச நிறுவனங்கள் செலவுகளை மேற்கொள்ள வேண்டும் என்ற சுற்று நிருபம் வெளியிடப்பட்டுள்ளதால் மேற்படி வெசக் பண்டிகைக்கான செலவுகளுக்கு பணம் திரட்டுவதில் பாரிய சிக்கல்களை எதிர்நோகியுள்ளதாக புத்தளம் மாவட்டச் செயலாளர் எஸ்.எச்.எம்.பி.ஹேரத், பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமிடம் தெரிவித்த வேண்டுகோளின்பேரில் பாராளுமன்ற உறுப்பினர் சகல இன மக்களின் சகவாழ்வுக்காக மேற்படி பணத்தொகையை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

# குடும்ப தகராறு; குடும்பப் பெண் வெட்டிக் கொலை

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

இபலோகம பொலிஸ் பகுதிக்குட்பட்ட விவின் வீதியில் பெண் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். இபலோகம ஹிரிபிட்டியாகம மைலகஸ்வெவ பகுதியைச் சேர்ந்த 45 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு வெட்டி கொலை செய்யப்பட்டுள்ளவராவர்.

கடந்த (08) காலை 5.00 மணியளவில் குறித்த பெண் ஹிரிப்பிட்டியாகம பகுதியில் அமைந்துள்ள தென்னை அபிவிருத்தி தொழிற்சாலைக்கு தொழிலுக்கு ஹிரிப்பிட்டியாகம விவின் குறுக்கு வீதிஊடாக சென்று கொண்டிருந்த போது இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

அவரது கணவரினால் இக்கொலை செய்யப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். இறந்துள்ள பெண் மற்றும் அவரது கணவருக்கும் இடையில் சிறிது காலமாக குடும்ப பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும். இது தொடர்பில் இபலோகம பொலிஸ் நிலையத்தில் விசாரணை நடைபெற்று வருவதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

# கதிரடிக்கும் இயந்திரத்துக்குள் சிக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் கல்நேவ மீதெல்லேவ பகுதியில் கதிரடிக்கும் இயந்திரத்துக்குள் அகப்பட்டு ஒருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்துள்ளதாக கல்நேவ பொலிஸார் தெரிவித்தனர்.

கல்நேவ மீதெல்லேவ பகுதியிலுள்ள வயல் நிலமொன்றில் (08) இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது. மீதெல்லேவ கல்நேவ பகுதியை வசிப்பிடமாக கொண்ட 42 வயதுடைய ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, உழவு இயந்திரத்தில் பொருத்தப்பட்டிருந்த கதிரடிக்கும் இயந்திரத்தின் உதவியுடன் கதிரடித்து விட்டு இயந்திரத்திலிருந்து கீழே இறங்கும் போது தலையில் கட்டப்பட்டிருந்த சாரம் இயந்திரத்துக்குள் அகப்பட்டதால் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மேலும் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்நேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மௌலவி ஹசன் ஃபரீதின் புதல்வர் காலமானார்



பிரபல மார்க்க அறிஞர்களிலொருவரான மௌலவி ஹசன் ஃபரீத் (பிந் நூரி) அவர்களின் புதல்வரான சஹல் ஹசன் ஃபரீத் (வயது 19) சனிக்கிழமை (08) கொழும்பில் இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கி காலமானார். அன்னார் ஜாமியதுல் இஸ்லாமியா கல்லூரியில் 2ஆம் ஆண்டில் கல்விகற்று வந்தவராவார்.

அன்னாரின் ஜனாஸா குப்பியாவத்தை ஜும்ஆப்பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் ஜனாஸாவில் உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல் பிரமுகர்கள் உட்பட பெருந்திரளான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## வடக்கின் உதயம்

# வாழ்வாதார உதவி வழங்கல்



வட மாகாண வைத்தியசாலைகளுக்கு பொறுப்பான சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் லியனகே, யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்கள் பலவற்றுக்கு வாழ்வாதார உதவி திட்டங்களை கையளித்தார். இவ்வைபவத்தில் சமூக சேவகர் திரு. நேருவும் கலந்து கொண்டார்.

# காரில் பயணித்தவரை வழிமறித்து வாள் வெட்டுத்தாக்குதல்

(யாழ். விசேட நிருபர்)

காரில் பயணித்தவரை மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் வீதியில் வழிமறித்து, வாள் வெட்டுத் தாக்குதலை நடாத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணம் இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது. இதில் பண்ணாகம் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய நபரே காயங்களுக்குள்ளானார். இவர், யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த இளவாலை பொலிஸார் 25 மற்றும் 30 வயதுடைய இருவரைக் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# ஆடுகளை கடத்திச் சென்ற மூவர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி விசேட நிருபர்)

யாழ்ப்பாணத்திலிருந்து புத்தளத்திற்கு கடத்தப்பட்ட 114ஆடுகளை சாவகச்சேரிப் பொலிஸார் கடந்த வெள்ளிக்கிழமை கைப்பற்றினர்.

ஏ9 வீதி ஊடாக கனரக வாகனத்தில் புத்தளம் பகுதிக்கு இந்த ஆடுகள் எடுத்துச் செல்லப்பட்டன. இதன் போது, மீசாலை பகுதியில் வைத்து குறித்த பொலிஸார் இவர்களை மடக்கிப்பிடித்தனர்.

வாகன சாரதியுட்பட மூவரைக் கைது செய்த பொலிஸார், 112 பெண் ஆடுகளையும் இரண்டு ஆண் (கடாய்) ஆடுகளையும் பாதுகாப்பாக மீட்டனர். சாவகச்சேரிப் பொலிஸாரின் சோதனை நடவடிக்கையில் இரு தினங்களுக்கு முன்பாக 23 கால்நடைகள் மீட்கப்பட்டிருந்தன. இந்நிலையிலே குறித்த இந்தக் கடத்தல் சம்பவமும் முறியடிக்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட ஆடுகளை பராமரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் விசாரணைகளையும் ஆரம்பித்து வருகின்றனர்.

# நான்கு குழந்தைகளுக்கு மேல் பெறும் சைவ குடும்பங்களுக்கு சன்மானம்

(யாழ். விசேட நிருபர்)

நான்கு பிள்ளைகளுக்கு மேல் பெற்று, தமிழில் பெயர் வைக்கும் தம்பதியினருக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை சைவ மகாசபை, பங்குனி உத்தர நாளான கடந்த புதன்கிழமை ஆரம்பித்தது.

இந்நிலையில் சமய, சமூக, மது ஒழிப்பு செயற்பாட்டாளரான சாந்தை பண்டதரிப்பைச் சார்ந்த கடம்பன் அசுவினி தம்பதியினர் ஐந்தாவது குழந்தையை பெற்றெமைக்காக ஊக்கத் தொகை வழங்கி கௌரவிக்கப்பட்டார். ஒரு தொகை நிதியும் அக்குடும்பத்தினருக்கு சத்து மாவும் வழங்கப்பட்டது. சைவ மகாசபை தலைவர் சண்முகம் இவற்றை வழங்கி கௌரவித்தார்.ஐந்து வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம், கொரோனா மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் சிறிது காலம் தடைப்பட்டிருந்தது.

இத்திட்டத்திற்கு பங்களிக்க விரும்பும் நல்லுள்ளமுள்ளோர் சைவ அறப்பணி நிதிய வங்கி கணக்கில் வைப்பிலிடுமாறு ரேபட்டுள்ளனர்.

## மலைச்சாரல்

# பண்டிகைக்கால நிகழ்வுகள் ஆரம்பமாகி உள்ளதால் உணவுகளை பரீட்சிக்கவும்

(தலவாக்கலை குறூப் நிருபர்)



பண்டிகைக் காலங்களில், உணவுகள் குறித்து அவதானமாக இருக்குமாறு நுவரெலியா மாநகரசபை பொதுச் சுகாதார அதிகாரிகள் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர். நுவரெலியாவில் வருடந்தோறும் நடத்தப்படும் ஏப்ரல் வசந்த கால களியாட்ட நிகழ்வுகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகின. இதைத் தொடர்ந்து எதிர்வரும் (30) வரை இந்தக் களியாட்ட நிகழ்வுகள் நடைபெறும். நுவரெலியா ஏப்ரல் வசந்த காலத்தை முன்னிட்டு நுவரெலியாவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் ஹோட்டல்களிலும் ஏப்ரல் வசந்த காலத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டுள்ள தற்காலிக உணவு கடைகளிலும் சிற்றூண்டிசாலைகளிலும் உணவுகள் மற்றும் இனிப்பு உணவு பண்டங்களையும் உண்ணுகின்றனர். இதன்போது, உணவுகள் உரிய முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதா? என்பதை அவதானிக்குமாறு நுவரெலியா மாநகரசபை பொது சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதிகளவில் சுற்றுலா பயணிகள் நுவரெலியாவிற்கு வருகை தருவதால், சந்தையில் தற்போது காலாவதியான மற்றும் மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் மிகவும் குறைந்த விலைகளில் விற்பனை செய்யக்கூடும். எனவே பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் உணவு பொருட்களை கொள்வனவு செய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# மாலை நேரங்களில் மழைபொழிவதால் நீர் வீழ்ச்சிகளில் நீராடுவதை தவிர்க்கவும்

(பலாங்கொடைதினகரன் நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளில் மாலை நேரங்களில் கடும் மழை பெய்து வருவதால், நீர்வீழ்ச்சிகளின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் அந்நீர்வீழ்ச்சிகளை பார்வையிடச் செல்வோர் அவதானமாகச் செயற்படுமாறு எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

அதிக மழை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள அலுபொல எல்ல தெஹன எல்ல பேறுவத்த எல்ல ஹல்எல்ல தும்புஸ்எல்ல போபத் எல்ல தோதலுஎல்ல கய்ரானகம எல்ல தூவிலி எல்ல ஆகிய நீர்வீழ்ச்சிகளின் நீர்மட்டம் திடீரென அதிகரித்துள்ளதாக நீர் வீழ்ச்சி சங்கத்தின் செயலாளர் இந்திக்க தெரிவித்தார்.

இது சம்பந்தமாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், இத்தினங்களில் மாலை வேளையில் பலாங்கொடை வேவல்வத்த குருபெவிலகம பெலிஹுல்ஓய வலேபோட ஆகிய பகுதிகளில் கடும் மழை பெய்வதால் நீர்வீழ்ச்சிகளின் நீர் மட்டம் திடீரென அதிகரித்துள்ளது. இதனால்,நீர்வீழ்ச்சிகளை கண்டுகளிக்க வரும் பொதுமக்கள் அந்த இடங்களில் மிகவும் அவதானமாக இருக்குமாறும் வெளி மாவட்டங்களிலிருந்து வரும் பொது மக்களுக்கு இது பற்றி அறிவிக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

# புதிய பஸ்கள் அன்பளிப்பு

(ஹற்றன் சுழற்சி நிருபர்)

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களிலுள்ள இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான டிப்போக்களுக்கு, புதிய பஸ்கள் வழங்கப்பட்டன.

இந்திய அரசாங்கத்தின் கடனுதவித் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட இந்த புதிய பஸ்களை கையளிக்கும் நிகழ்வு, நேற்று (09) போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தலைமையில் நுவரெலியா கிரகரி வாவி பகுதியில் இடம்பெற்றது.

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் உள்ள ஏழு டிப்போக்களுக்கு 26 புதிய பஸ்கள் இதன்போது கையளிக்கப்பட்டன. மேலும் இந்த பஸ்களை தோட்ட மற்றும் கிராமப்புற வீதிகளில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# சகாக்களுடன் ஆற்றில் குளித்த இளைஞனை காணவில்லை

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

சீதாவக்க ஆற்றின் தல்துவ பிரதேசத்தில் சகாக்களுடன் குளித்துக் கொண்டிருந்த 21 வயதான இளைஞர் காணாமல் போயுள்ளார். நண்பர்களுடன் சுற்றுலா வந்த இவர் சீதாவாக்க ஆற்றில் குளித்துக் கொண்டிருக்கையிலே காணாமல் போயுள்ளார்.

தெஹிவல அத்திட்டிய பிரதேசத்தை சேர்ந்த இவர்களே இப்பகுதிக்கு நீராட வந்துள்ளனர்.

இளைஞன் காணாமல் போயுள்ளமை தொடர்பில் மேலதிக விசாரணைகளை நடத்தி வருவதாகவும் பொலீசார் தெரிவித்தனர். பொலீசார், கடற்படையினர் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து இளைஞனை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஏப்ரல் 10 திங்கட்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்

சுபஹ் - 04.50
லுஹர் - 12.14
அஸர் - 03.16
மஃரிப் - 06.19
இஷா - 07.30

இன்றைய சுபதினம்

சுபகிருது வருடம் பங்குனி 27

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி






# இறை மன்னிப்பை பெறுவதற்கான வழிகள்

மனிதன் தவறுசெய்யக்கூடியவனாக படைப்பக்கப்பட்டுள்ளான். தவறுகளுக்கான மன்னிப்பை அவன் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளான். கருணையாளனான அல்லாஹ் பாவங்களை மன்னிப்பதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுத்துள்ளான். மனிதன் அவற்றை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இதற்கான ஒரு வழிமுறை தான் தவ்பா என்ற அல்லாஹ்வின் பால் மீள்வதற்கான முறையாகும்.

'முஃமின்களே நீங்கள் தவ்பா செய்து அல்லாஹ்வை நோக்கி மீண்டுவிடுங்கள். வெற்றியடைவீர்கள் (நூர் 31)

பாவங்களுக்கான மன்னிப்பை பெறுவதற்கான இன்னொரு வழிதான் 'இஸ்திக்பார்' ஆகும். 'அஸ்தக்பிருல்லாஹல் அழீம்' 'மகத்தான இறைவனே! உன்னிடம் பாவமன்னிப்பை கோருகின்றேன்' என்ற வார்த்தை இஸ்திக்பார் என்று அழைக்கப்படுகின்றது. நபி (ஸல்) அவர்கள் நாளாந்தம் எழுபது விடுத்தங்கள் இவ்வாறு சொல்லக்கூடியவராக இருந்துள்ளார்கள். (ஆதாரம் புஹாரி)

'இறையச்சம் உள்ள ஒருவர் தவறொன்றை செய்து விட்டால், அல்லது தனக்குத்தானே அநீதி இழைத்துக் கொண்டு விட்டால் உடனடியாக அல்லாஹ்வை நினைத்து தமது பாவங்களுக்காக இஸ்திஃபார் செய்வார்கள். அல்லாஹ்வை தவிர பாவங்களை மன்னிப்பது யார்? மேலும் அவர்கள் அறிந்து கொண்டே பாவச்செயல்களில் பிடிவாதமாக இருக்க மாட்டார்கள். (ஆல இம்ரான் 135) என்று அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

தொழுகை, தர்மம், திக்ர், பிறருக்கு உதவுதல் போன்ற நற்செயல்களும் பாவங்களை மன்னிக்கின்றன. 'நீங்கள் எங்கிருந்த போதிலும் அல்லாஹ்வை பயந்துகொள்ளுங்கள். ஒரு பாவச்செயலை செய்தால் அதனை தொடர்ந்து நன்மையான ஒரு விடயத்தை செய்யுங்கள். ஏனெனில் அது பாவத்தை அழித்துவிடும். மக்களுடன் பண்பாடாக பழகுங்கள். (ஆதாரம் திர்மிதி)

ஒருவன் ஒரு பாவத்தை செய்கிறான். பின்னர் அழகான முறையில் தன்னை சுத்தப்படுத்திக்கொண்டு இரண்டு ரக்அத்துகளை தொழுகின்றான். பின்னர் அவன் இஸ்திக்பார் செய்கின்றான். இந்த மனிதனை அல்லாஹ் மன்னிக்கின்றான். (ஆதாரம் அஹ்மத், அபூதாவூத், திர்மிதி)

பர்ளான தொழுகைகளில் ஈடுபடுவது, திக்ர் செய்வது போன்ற பல விடயங்கள் பாவங்களுக்கு மன்னிப்பை பெற்று தருகின்றன. கருணையாளனான அல்லாஹ் மன்னிக்க தயாராக இருக்கிறான். அவனது மன்னிப்பை பெற்றுக்கொள்ள நாம் முயற்சிப்போம்.

அஷ் ஷெய்க்
யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)

# கொழும்பு சங்ரில்லாவில் இன்று இப்தார் நிகழ்வு

ஹாஷிம் உமர் பௌண்டேசன் ஏற்பாடு செய்துள்ள இப்தார் நிகழ்வு கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் இன்று திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாக ஏற்பாட்டுக் குழு அறிவித்துள்ளது. ஹாஷிம் உமர் பௌண்டேசனின் ஸ்தாபகத் தலைவரும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகருமான புரவலர் ஹாஷிம் உமர் தலைமையில்

04

# தொழிற்சங்க செயற்பாடுகள் மூலமாக மக்களை அசௌகரியப்படுத்த வேண்டாம்

## இரண்டு மாதங்களுக்குள் மருந்து தட்டுப்பாடு நிவர்த்திக்கப்படும்

## கண்டியில் சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



(அக்குறணை குறூப் நிருபர்)

பொது மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் சில தொழிற்சங்க செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த 90 சதவீதமானோர் விருப்பம் என சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

கண்டி பல்லேகலை பகுதியில் (07) நடைபெற்ற கூட்டமொன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், பொது மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கும் சில தொழிற்சங்க செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த 90 சதவீதமானோர் ஒத்துழைப்பு வழங்குவதை சமூக ஊடகங்கள் வாயிலாக தான் அறிய முடிகிறது. எதிர்வரும் இரண்டு மாதங்களுக்குள் மருந்து தட்டுப்பாட்டை முழுமையாக நிவர்த்தி செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், நியாயமான விலைக்கு மருந்துகளை விற்பனை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்த நடவடிக்கைகள் எடுக்க உள்ளதாகவும் அமைச்சர் ரம்புக்வெல்ல மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மக்களை அசௌகரியத்துக்கு உள்ளாக்கி, அரசியல் நோக்கத்தை நிறைவேற்ற செயற்படும் சில தொழிற்சங்க செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த 90 சதவீதமானோர் ஒத்துழைப்பு வழங்குவதை சமூக ஊடகங்கள் வாயிலாக தாம் பார்ப்பதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்பு இந்துக் கல்லூரியின் ஓய்வுநிலை பிரதி அதிபர் தம்பையா இராஜரட்னம் தலைமையில் எதிர்வரும் புதன்கிழமை (12) மாலை 5.30 மணிக்கு நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் "பேராசிரியர் சோ. சந்திரசேகரம் நினைவுப் புலமைப் பகிர்வு" என்னும் தலைப்பில் கல்வி அமைச்சு கல்வி நிபுணத்துவ ஆலோசகரும், தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளருமான கலாநிதி உலகநாதர் நவரட்ணம், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம், மொழி கற்கைகள் துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் தலைவருமான கலாநிதி கலா சந்திரமோகன் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளனர்.

பயங்கரவாத தடைச் சட்டமோ அல்லது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமோ

# இரு சட்டங்களும் நாட்டுக்குத் தேவை இல்லையென்கிறார் சுமந்திரன் MP



பயங்கரவாத தடைச் சட்டமோ அல்லது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமோ அவ்வாறான எந்தவொரு சட்டமும் நாட்டுக்குத் தேவை இல்லையென்கிறார் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன்.

அனைவருக்கும் நீதி அமைப்பினால் அண்மையில் இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொடர்பான விழிப்புணர்வுச் செயலமர்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், "1979ஆம் ஆண்டில் பயங்கரவாத் தடைச்சட்டம் ஒரு தற்காலிக ஏற்பாடாகவே கொண்டுவரப்பட்டது. ஆனால் 44 வருடகாலம் அது நீடித்தது. அப்போதும் அது ஒரு சாராருக்கு மட்டும் எதிரானது என நாட்டு மக்களில் இன்னொருசாரார் வாளாவிருந்து விட்டனர். அதன் பின்னர் 2019ல் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் கொண்டுவரப்பட்ட போதும் அது ஏதோவொரு இனத்துக்கு எதிரானதுதானே என அனேகர் வாய்மூடி மௌனம் காத்தனர்.

இப்போது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரப்படுகின்ற போதும் அனேகர் மௌனமாக இருக்கின்றனர்.

பொருளாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்கும் மக்கள் உண்மையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு குறித்துக் கவலைப்படவில்லை. அதன் பாரதூரத்தன்மை குறித்து அவர்களுக்குத் தெரியாது.

அது நிறைவேற்றதிகாரத்தை மேலும் வலுப்படுத்துவதோடு மாத்திரமல்லாமல் பாதுகாப்பு, பொலிஸ் தரப்பின் அதிகாரங்களை கட்டுக்கடங்காமல் அதிகரித்துள்ளது. உதாரணத்துக்கு முன்னர் ஒருவரை விசாரணைகளின்றி தடுத்துவைக்கும் அதிகாரம் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கே இருந்தது.

ஆனால் இச்சட்ட வரைவு அவ்வதிகாரத்தை நாட்டில் உள்ள பிரதிப்பொலிஸ் மா அதிபர்களுக்கு வழங்குகின்றது.

நாட்டில் 60க்கும் மேற்பட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் இருக்கின்றார்கள். அப்படியானால் நிலைமை எத்துணை மோசமானது? என்றும் அவர் கேள்வி எழுப்பினார். அதனாலேயே உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு வரைவு குறித்து நாட்டு மக்களிடையே விழிப்பணர்வை ஏற்படுத்தும் வகையிலான செயலமர்வுகளை நாடெங்கிலும் நடத்தவுள்ளதாவும் அதன் முதற்கட்டமே இச்செயலமர்வென்றும் அவர் தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை பள்ளிவாசல்களில்

# நாட்டிற்காக விசேட துஆ பிரார்த்தனை

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டையிலுள்ள சகல பள்ளிவாயல்களிலும் புனித ரமழான் மாதத்தில் நாட்டிற்காக விசேட துஆ பிரார்த்தனைகள் இடம்பெற்று வருகின்றன.

இம்மாவட்டத்திலுள்ள சகல பள்ளிவாயல்களிலும் புனித ரமழான் மாதத்தினை முன்னிட்டு விசேடநிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன. இதில் பெண்கள் உட்பட பெரும் திரளானோர் கலந்து கொண்டு வருகின்றனர்.

தொழுகை, தராவீஹ் மற்றும் விசேட பயான் நிகழ்வுகளின் போது நாட்டிற்காகவும் நாட்டின் பொருளாதார நிலைமை சீரடைவதற்காகவும் மக்கள் பள்ளிவாசல்களில் ஒன்றுகூடி விசேட துஆப் பிரார்தனைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தோடு, கடுமையான வெப்பமான காலநிலை நிலவி வருகிறது. ஆத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளதினால் மக்கள் மகிழ்ச்சியிலுள்ளனர்.

தலாவ பிரதேசத்தில்

# நிலையான விவசாய அபிவிருத்தி வேலைத் திட்டம் முன்னெடுப்பு

அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்



சத்தான உணவைப் பெறுவதை நோக்கமாகக் கொண்ட நோக்கில் *'Outrech projetet guarantee limited'* நிறுவனத்தின் மூலம் நிலையான விவசாய அபிவிருத்தி திட்டம் தலாவ பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட ஆறு கிராம சேவகர் அலுவலகங்களை உள்ளடக்கி தோட்டச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இங்கு உபயோகத்திற்கு தேவையான மரக்கறிகள் மற்றும் பழவகைகள் செய்கை பண்ணப்பட்டுள்ளன. உபயோகத்திற்கு மேலதிகமானவைகளை சந்தையில் விநியோகித்து வருமானத்தை விருத்தி செய்வதே இதன் நோக்கமாகும்.

இதற்காக 200 விவசாயக் குடும்பங்களை ஈடுபடுத்தியுள்ளனர். இங்கு தேனீக்களை கட்டுப்படுத்த தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் நீல மலர் சாகுபடிகளுக்கு தேவையான உபகரங்கள் மற்றும் ஆடுகள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.



தமிழ், சிங்கள புத்தாண்டையும் புனித நோன்புப் பெருநாளையும் முன்னிட்டு பெருமளவான மக்கள் பொருட்களை கொள்வனவு செய்ய கொழும்பு புறக்கோட்டைப் பகுதிக்கு நேற்று வருகை தந்தபோது... (படம்: ஏ.எஸ்.எம்.ஜாவித்)

# பள்ளிவாசல் முன்றலில் இரு குழுக்களுக்கிடையில் மோதல்

## ஒருவர் உயிரிழப்பு; மூவர் கைது

(பெரியநீலாவணை விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட செந்நெல் கிராமம் 2 பகுதியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் முனீர் பள்ளிவாசல் முன்றலில் இடம்பெற்ற குழு மோதலில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இச்சம்பவம் (7) மாலை இடம்பெற்றுள்ளது.

சம்மாந்துறை பிரதேச எல்லைக்குட்பட்ட பள்ளிவாசல்களுக்கு புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதற்காக இடம்பெற்ற நிர்வாக தெரிவு கூட்டம் ஒன்றில், சிலர் எதிர்வரும் நோன்புப் பெருநாள் முடிந்தவுடன் நிர்வாகத்தை தெரிவு செய்யுமாறு கோரியதுடன் மற்றுமொரு குழுவினர் சில தினங்களில் புதிய நிர்வாகம் தெரிவு செய்ய பட வேண்டுமென தெரிவித்திருந்தனர்.

இதனை அடுத்து எதிர்வரும்

04

**பெறுகை அறிவித்தல் (திருத்தப்பட்டது)**
**சரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரி**
**உள்ளக மின்சார அமைப்பை நிர்மாணித்தல்**

2023 மார்ச் 27ம் திகதி இந்தப் பத்திரிகையில் முன்னர் பிரசுரிக்கப்பட்ட மேற்படி பெறுகை அறிவித்தலானது, இப் பெறுகை அறிவித்தல் மூலம் மாற்றியமைக்கப்படுகின்றது.

1. C7, C6 அல்லது C5 (கட்டிடம்) இல் செல்லுபடியாகும் CIDA பதிவைக் கொண்டுள்ள தகைமையும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகிறது.
2. திட்டத்தின் நேரடி நிர்மாணிப்பு செலவுகள் (வெட் இன்றி) ரூ. 15.1 மில்லியன் ஆகும்.
3. முன்னைய பெறுகை அறிவித்தலின் பந்தி 03 இத்தால் நீக்கப்படுகிறது.
4. 2023.05.02ம் திகதி பி.ப. 3.30 வரை உத்தேச மனுதாரர்களால் விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
5. 2023.05.03ம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்பு விலைமனுக்கள் விநியோகிக்கப்படும்.
6. விலைமனுக்கள் 2023.07.18 வரை செல்லுபடியாதல் வேண்டும்.
7. விலைமனுப் பிணை 2023.08.15ம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.

ஏனைய தகவல்கள் மாற்றமின்றி காணப்படும்.

**தலைவர், பெறுகைக் குழு,**
**சரிபுத்த தேசிய கல்வியியற் கல்லூரி, தம்பதெனிய.**
**10.04.2023**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.04.08
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5084 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13.182.459.00 — ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 7 2 5 8 6 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3326 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 95,291,264.64 — ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 23 35 53 78

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1432 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 313,881,638.00 — ஆங்கில எழுத்து D — 01 — வெற்றி இலக்கங்கள் 11 19 30 40 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1539 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,920,089.20 — வெற்றி இலக்கங்கள் 7 6 2 5 5 1

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 393 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,909,101.60 — வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 15 27 47 48 — விசேட இலக்கினம் துலாம்

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1114 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,434,415.20 — ஆங்கில எழுத்து A — வெற்றி இலக்கங்கள் 10 22 27 57

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.04.07
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5083 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,992,520.00 — ஆங்கில எழுத்து O — வெற்றி இலக்கங்கள் 0 6 4 1 7 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3325 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,887,103.44 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 12 65 68 76

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1431 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 313,584,022.00 — ஆங்கில எழுத்து L — 15 — வெற்றி இலக்கங்கள் 14 23 71 76 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1538 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,861,451.20 — வெற்றி இலக்கங்கள் 5 2 2 5 2 7

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 392 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,899,074.80 — வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 21 27 34 50 — விசேட இலக்கினம் மகரம்

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1113 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 85,304,720.00 — ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 04 18 24 43

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 211.25 | 225.29 |
| கனடியன் டொலர் | 232.02 | 247.26 |
| யூரோ | 340.65 | 360.74 |
| ஜப்பான் யென் | 2.3550 | 2.4949 |
| சிங்கப்பூர் டொலர் | 235.13 | 249.76 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 388.11 | 410.28 |
| சுவிஸ் பிராங்க் | 340.65 | 364.37 |
| அமெரிக்க டொலர் | 313.37 | 330.50 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹரின் டினார் | 858.78 |
| குவைத் டினார் | 1,055.52 |
| ஓமான் ரியால் | 840.95 |
| கட்டார் ரியால் | 88.53 |
| சவூதி ரியால் | 86.32 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 88.15 |

## கொழும்பு சங்ரில்லாவில்... 03ஆம் பக்கத் தொடர்

இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் அரச மற்றும் தனியார் துறைகளின் தலைவர்கள், பணிப்பாளர்கள், ஊடக நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன நல்லுறவை வளர்க்கும் வகையில் மூவினங்களையும் சேர்ந்தவர்களுக்கு இதற்கான அழைப்பிதழ்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக ஏற்பாட்டுக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

## பள்ளிவாசல் முன்றலில்... 03ஆம் பக்கத் தொடர்

ஞாயிற்றுக்கிழமை புதிய நிர்வாகத்தை தெரிவு செய்ய தீர்மானித்த நிலையில் குறித்த கூட்டம் நிறைவடைந்திருந்தது. கூட்டத்தை நிறைவு செய்து திரும்பியவர்கள் இரு குழுக்களாக பிரிந்து மோதலில் ஈடுபட்டதாக பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. மேலும், இந்த மோதல் சம்பவத்தில் 65 வயது மதிக்கத்தக்க சம்மாந்துறை மலையடி கிராமம் கிராம சேவையாளர் பிரிவு 4 பகுதியை சேர்ந்த குடும்பஸ்தர் சம்பவ இடத்தில் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த சம்மாந்துறை பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை கைது செய்து மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரயில் பெட்டிகளிலிருந்து...

கழன்று பயணித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை களுத்துறை ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று (9) காலை களுத்துறை வடக்கு பகுதியில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது..

பெட்டிகளிலிருந்து கழன்ற ரயிலின் இயந்திரம் சுமார் ஒரு கிலோமீற்றர் தூரம் வரை சென்ற பின்னர் நின்றதாக கூறப்படுகிறது.

ரயில் பெட்டிகளிலிருந்து பிரிந்த இயந்திரத்தை மீண்டும் எடுத்துச் சென்று பொருத்திய பின்னர், சுமார் 15 நிமிடங்கள் தாமதமாகி மீண்டும் குறித்த ரயில் மருதானை நோக்கி பயணித்துள்ளது.

## திருமலை கடற்பரப்பில்...

போக்குவரத்தை வழங்கும் திறன் கொண்ட இந்த கப்பலில் 1200 கடல் மைல் தூரத்திற்கு 600 தொன் உபகரணங்களை எடுத்துச் செல்ல முடியும்.

இதன் சராசரி வேகம் மணிக்கு 25 கடல் மைல்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எரிபொருள் நிரப்பலுக்காக இந்த கப்பல் திருகோணமலைக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லொத்தர் சபைக்கு...

நாட்டின் தனியார் மற்றும் அரச துறைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. எனினும் அதனை அச்சமின்றி எதிர்கொண்டு சிறந்த நிர்வாகத்துடன் தேசிய லொத்தர் சபை தனது இலக்குகளை எட்டியுள்ளது. மேலும் தேசிய லொத்தர் சபை புதுப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் DLB என புதிய வர்த்தக நாமத்தில் செயற்படும் என சுட்டிக்காட்டியுள்ளார்.

## வீதியில் நின்ற 10 வாகனங்களை...

உடைத்துக்கொண்டு சென்று வீடொன்றின் மீதும் மோதியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்தில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர் எனவும் கூறப்படுகிறது.

பஸ்யாலயிலிருந்து மீரிகம நோக்கி பயணித்த கிரேன் வாகனம் மக்கள் நெரிசல் மிகுந்த கல்எலிய நகர வீதியில் அதிவேகமாக பயணித்து, வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 10 முச்சக்கரவண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது.

அத்தோடு அந்த கிரேன் வாகனம் ஒரு வீட்டின் மதில் மற்றும் கதவுகளையும் உடைத்துக்கொண்டு சென்று, வீட்டின் மீது மோதியபடி நின்றுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## நான்கு வருடங்களாகிறது...

ஆராதனையின் போது கருத்து தெரிவித்துள்ள கர்தினால் மல்கம் ரஞ்சித், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று நான்கு வருடங்களாகின்றது. இன்னமும் நீதியில்லை. என்ன நடந்தது என்பது இன்னமும் எவருக்கும் தெரியாது. மக்கள் பல்வேறு விதமான விடயங்களை தெரிவிக்கின்றனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

நாங்கள் உண்மை நீதிக்காக போராட வேண்டும். அதுவே கிறிஸ்தவ மதம் எனவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

## பாரிய ரயில் விபத்தை...

வீழ்ந்ததில் மலையக ரயில் சேவைக்கு நேற்று முன்தினம் இரவு பாதிப்பு ஏற்பட்டிருந்தது. இதனை அறிந்த பொதுமகன் ஒருவர், உடனடியாக செயற்பட்டு மின் விளக்கு ஒன்றுடன் ரயில் சாரதிக்கு சமிக்ஞை வழங்கியுள்ளார்.

குறித்த சமிக்ஞையை அறிந்த சாரதி, உடனடியாக கொழும்பில் இருந்து பதுளைக்கு பயணித்த ரயில் குட்செட் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த நபரின் முன்னெச்சரிக்கை நடவடிக்கையினால் பாரிய அனர்த்தம் ஒன்று தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், குறித்த ரயில் சில மணி நேரம் நிறுத்தி வைக்கப்பட்டு தாமதத்துடன் பயணித்தாக எமது செய்தியாளர் தெரிவித்தார்.

## 207 சொகுசு வாகனங்களுக்கு...

தெரிவிக்கப்படுகின்றது. தற்போது அரசாங்கத்திற்கு புதிய வாகனங்கள் இறக்குமதி செய்யப்படவில்லை என்பதுடன் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு வாகனங்கள் இல்லாத நிலை காணப்படுகின்ற அதேவேளை மாகாண சபைகள் கலைக்கப்பட்ட போது அது தொடர்பான வாகனங்களுக்கு என்ன ஆனது என்பது தீவிர விவாதத்திற்கு உள்ளாகியுள்ளது.

ஒரு மாகாண சபையின் முதலமைச்சருக்கு நான்கு வாகனங்களும், அவைத்தலைவருக்கு மூன்று வாகனங்களும், நான்கு மாகாண சபை அமைச்சர்களுக்கு தலா இரண்டு வாகனங்களும், சபைத் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவருக்கு தலா ஒரு வாகனமும் வழங்கப்படும். இதன்படி, ஒன்பது மாகாண சபைகளுக்கும் சொந்தமான வாகனங்களின் எண்ணிக்கை 207 ஆக இருந்தது.

## இந்திய அரசின் உதவித்திட்ட...

இதன்போது, நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சி. பி. ரத்நாயக்க, எஸ். பி. திசாநாயக்க, மருதப்பாண்டி ரமேஸ்வரன் மற்றும் டிப்போ அத்தியட்சகர்கள், டிப்போ ஊழியர்கள், அரச உத்தியோகத்தர்கள் என பெருமளவானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இந்திய மயக்க மருந்துகள்...

இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த மயக்க ஊசிகள் தொடர்பில், நிபுணர்களின் ஒத்துழைப்புடன் விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

மூன்று பிரிவுகளின் கீழ் தற்காலிகமாக குறித்த மருந்து பாவனை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த மயக்க மருந்துகள், இந்திய கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த நாட்டின் மருந்து நிறுவனம் ஒன்றினால் அது அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது, முறையான முன் பரிசோதனைக்கு பின்னரே இந்த மயக்க மருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதா? என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோக பிரிவின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, பேராதனை போதனா வைத்தியசாலையில் சிசேரியன் சத்திர சிகிச்சையின் பின்னர் உயிரிழந்த 26 வயதான கர்ப்பிணி தாய்க்கு இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட மயக்க மருந்து வழங்கப்பட்டதாக சுகாதார தொழிற்சங்க தொழில் வல்லுனர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்...

விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு இதுவரையில் பதில் எதுவும் கிடைக்கவில்லை என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மற்றும் நிதி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களுக்கு பதிலளிக்கப்படவில்லையென்றும் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. எவ்வாறெனினும், எதிர்வரும் இரண்டு நாட்களில் பிரதமருடன் சந்திப்பு நடத்த சந்தர்ப்பம் கிடைக்கும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளது. எதிர்வரும் 25ம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே திட்டமிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இப்தார் நிகழ்வு இன்று

**எம்.எஸ்.எம். ஸாகிர்**

கொழும்பு மாவட்ட மஸ்ஜித் சம்மேளனம் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இப்தார் நிகழ்வு இன்று (10) திங்கட்கிழமை மாலை 5.15 மணிக்கு கொழும்பு ஜாவத்தை ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெறவுள்ளது. முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் பைஸல் ஆப்தீன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த இப்தார் நிகழ்வில், புத்த சாசன மற்றும் மத விவகாரங்களுக்கான அமைச்சர் உட்பட சர்வ மதத் தலைவர்கள், பிற மதத் தலைவர்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சின் உயர் அதிகாரிகள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஊழியர்கள், அரச உயர் அதிகாரிகள் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வு சக்தி எப்.எம். அலைவரிசையில் நேரடி அஞ்சல் செய்யப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தின் புதிய நிர்மாணப் பணி



வரலாற்று சிறப்பு வாய்ந்த உடப்பு ஆண்டிமுனை பகுதியில் உள்ள ஸ்ரீகந்தசுவாமி ஆலயத்தின் புதிய நிர்மாணப் பணியின் முதற் கட்டம் புதன்கிழமை( 5)காலை சிரமதானப் பணிவுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. உடப்பு இந்து ஆலய பரிபாலன சபையின் தலைவர் இரா.கலைச்செல்வன் உட்பட ஸ்ரீகந்தசுவாமி ஆலய திருப்பணிச் சபையினர் இதில் கலந்து கொண்டனர். இந்த ஆலயம் ஆரம்ப காலம் தொடக்கம் சிறிய ஆலயமாக காணப்பட்டது. ஆலயத்தின் அருகில் நீண்டகாலமாக கருங்கல் இட்டு அமைக்காத அத்திவாரம் ஒன்று காணப்பட்டது. அவை செப்பனிடப்பட்டு, கருங்கல் இட்டு புதிய அத்திவார வேலைத் திட்டம் மிக விரைவில் இடம்பெறவுள்ளது.

# சோபகிருது வருடப்பிறப்பு

**● புது வருட ஆபரணம்**

திருக் கணித பஞ்சாங்கத்தின் படி வைரம் பதிக்கப்பட்ட ஆபரணம்.

**● கைவிசேடம்**

திருக்கணித பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2 (15.04.2023) சனிக்–கிழமை காலை 06.45 முதல் 07.30 வரை. சித்திரை 2 (15.4.2023) காலை 08.00 மணியில் இருந்து 8.55 வரை சித்திரை 3 (16.04.2023) ஞாயிறு காலை 08.00 மணி முதல் 09.30 வரை. சித்திரை 3 (16.04.2023) ஞாயிறு பகல் 12.10 முதல் 1.15 வரை.

**● புதுக்கணக்கு**

திருக்கணிதத்தின் படி சித்திரை 13 (26.04.2023) புதன்கிழமை காலை 07.32 முதல் 09.05 வரைசித்திரை 20 (03.05. 2023) புதன் காலை 07.30 முதல் 08.40 வரை சித்திரை 22 (05.05.2023) வெள்ளிக்கிழமை காலை 07.15 முதல் 08. 28 வரை

கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா

## இலங்கையருக்கு ஜப்பானில்...

எட்டப்பட்டுள்ளது. ஜப்பானுக்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, அந்நாட்டின் உயர்மட்ட இராஜதந்திரிகள் மற்றும் ஆட்சேர்ப்பு நிறுவனங்களின் தலைவர்களை சந்தித்தபோதே இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

தாதியர் துறையில் பணியாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான நாட்களின் எண்ணிக்கை மற்றும் மையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அதிகமான தொழிலாளர்களுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்புகளை வழங்க முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, தொழில் தேடுபவர்களுக்கு அந்த பரீட்சைக்குத் தோற்றுவதற்கான வாய்ப்பை வழங்க ஜப்பானிய தொழிலாளர் அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

## இந்த ஆட்சியை எவராலும்...

தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"மொட்டுவின் ஆட்சியில் ஜனாதிபதியும், பிரதமரும்தான் பதவி விலகினார்கள். ஆனால், புதிய ஜனாதிபதி, புதிய பிரதமருடன் 'மொட்டு' ஆட்சி இன்னமும் தொடர்கின்றது.

இந்நிலையில் ரணில் விக்கிரமசிங்க, தினேஷ் குணவர்த்தன ஆகிய இருவரும் எனது சிறந்த நண்பர்கள்.

ஜனாதிபதி, பிரதமர் பதவிகளை வகிக்கும் அவர்களுக்கு எமது கட்சியின் ஆதரவு தொடர்ந்தும் இருக்கும். பிரதமர் தினேஷ் குணவர்த்தன எமது கட்சியின் மூத்த உறுப்பினர்.

அவரின் பதவியை நாம் பறிக்கவுள்ளதாக சில ஊடகங்கள் விஷமத்தனமான பொய்ச் செய்திகளை வெளியிட்டு வருகின்றன. இதற்குப் பின்னால் எதிர்க்கட்சியினர் உள்ளனர் " என மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

## இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு...

தெரிவித்துள்ள அவர், அதிகரித்த பொருளாதார நெருக்கடிகள் மற்றும் கொள்கை தவறுகளிற்கு பின்னர் இலங்கை மீளகட்டியெழுப்புவது குறித்து அர்ப்பணிப்புடன் உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணயநிதியம் உதவுவதற்கே இங்கு வந்துள்ளது. இலங்கைக்கு மிகவும் தேவையான தருணத்தில் அடுத்த நான்கு வருடத்திற்கு 3 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க சர்வதேச நாணயநிதியம் முன்வந்துள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

2019 முதல் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அளவு வரிவிலக்களிப்பும் எதிர்பார்க்கப்பட்ட சீர்திருத்தங்களில் காணப்பட்ட தாமதங்களும் இலங்கை அதிகளவு கடன் குறைந்தளவு அந்நியசெலாவணி கையிருப்புடன் கொரோனா பெருந்தொற்று காலத்திற்குள் நுழையவேண்டிய நிலையை ஏற்படுத்தியது என தெரிவித்துள்ள பீட்டர் புரூவர், அந்நிய செலாவணி கையிருப்பில் இல்லாததால் மின்துண்டிப்பு, உணவு, மருந்து, அத்தியாவசியப்பொருட்கள் போன்றவற்றிற்கான தட்டுப்பாடு உருவானது. நீண்ட பெற்றோல் வரிசைகள் உருவாகின எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தனது வரலாற்றில் முதல் தடவையாக தனது கடனை திருப்பி செலுத்த முடியாத வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டது. இதற்கான சுலபமான தீர்வுகள் இல்லை. இந்த பாரிய பிரச்சினைக்கு தீர்வை காண்பதற்கு அனைவரும் ஒன்றிணையவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் அதேவேளை நலிவடைந்த நிலையில் உள்ள மக்களிற்கு ஆதரவளிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச நாணயநிதியத்தின் அதிகாரி, சர்வதேச சமூகம் இலங்கையின் முயற்சிகளிற்கு ஆதரவளிக்கவேண்டும்.

அதன் காரணமாக இலங்கை மீண்டும் வலுவான உள்ளடக்கிய வளர்ச்சிப்பாதையில் பயணிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

## உண்மை மற்றும் நல்லிணக்க...

ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை என்று அறிவித்திருக்கும் அதேவேளை, தெற்கில் உள்ள பாதிக்கப்பட்ட தரப்பினர் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் சாதிக்க முடியாததை உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் சாதிக்க முடியும் என்று தாம் நம்பவில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

மூன்று தசாப்த காலமாக நாட்டில் இடம்பெற்ற ஆயுத மோதலின்போது பதிவான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உரியவாறான விசாரணைகளை முன்னெடுத்து நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமாறு சர்வதேச சமூகம் இலங்கையை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறது. இவ்வாறானதொரு பின்னணியில் தென்னாபிரிக்காவில் ஸ்தாபிக்கப்பட்டதையொத்த உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவொன்றை இலங்கையில் ஸ்தாபிப்பதற்குரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

அதன்படி, இதுகுறித்து தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் தாம் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருப்பதாகவும், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை ஸ்தாபிப்பதற்கு அவர்கள் இணக்கம் தெரிவித்திருப்பதாகவும் குறிப்பிட்ட நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, அவ்வாணைக்குழுவின் கீழ் நியமிக்கப்படும் அதிகாரிகள் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்றும் குறிப்பிட்டார்.

ஆனால், இனிவரும் காலங்களில் தாம் எந்தவொரு உள்ளகப் பொறிமுறையையும் நம்பி ஏமாறுவதற்கும், காலத்தை வீணடிப்பதற்கும் தயாரில்லை என்று தெரிவித்துள்ள வடக்கு, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள், சர்வதேச விசாரணை மாத்திரமே தமது தேவை என்றும், அங்கும் நீதி கிடைக்காவிட்டால் போராடிச் சாவோம் என்றும் அறிவித்துள்ளனர்.

அதேவேளை இதுபற்றி கருத்து வெளியிட்டிருக்கும் தெற்கில் உள்ள பாதிக்கப்பட்ட தரப்பினர், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை தாம் எதிர்க்கவில்லை எனும் போதிலும், இதுவரை காலமும் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் ஊடாக கிடைக்கப்பெறாத தீர்வு, இப்புதிய ஆணைக்குழுவின் ஊடாக கிடைத்துவிடும் என்று தாம் நம்பவில்லை என தெரிவித்துள்ளார்.

## இரு நிறுவனங்கள் கடும்...

கணக்காய்வாளரின் அறிக்கை தெரிவித்துள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2022, ஆகஸ்ட் இறுதியில் சுமார் 1,051 பில்லியன் ரூபா திரட்டப்பட்ட இழப்பை பதிவு செய்தது.

இந்தநிலையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் செலுத்தவேண்டிய மொத்த நிலுவைத் தொகை 2021 இல் 3.36 பில்லியன் ரூபாவாகவும், 2022 இல் 4.31 பில்லியன் ரூபாவாகவும் இருந்தன.

நிறுவனங்களால் குறிப்பிடத்தக்க கடன் திட்டம் பராமரிக்கப்பட்டு வந்தாலும், கடன் தொடர்பில் முறையான நிதிக் கொள்கை எதுவும் நிறுவப்படவில்லை.

அத்துடன் ஊழியர்களின் அடிப்படை வருமானம், கடன் தவணை மற்றும் இதர செலவுகளுக்கு போதுமானதாக இல்லாத காரணத்தால், அவர்கள் கூடுதல் நேரம் வேலை செய்ய வேண்டியுள்ளது.

அதன்படி, கூட்டுத்தாபனத்தின் மொத்த ஊழியர்களில் 40 சதவீதத்துக்கும் மேலானவர்களும், ஸ்டோரேஜ் நிறுவனத்தின் மொத்த ஊழியர்களில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்டவர்களும் தங்களது அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதத்துக்கு மேல் கூடுதல் நேரம் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

கடனைத் திருப்பிச் செலுத்தும் திறனைப் பொருட்படுத்தாமல் பொருத்தமற்ற கடன் திட்டங்களைச் செயல்படுத்தியதன் விளைவாக, ஊழியர்கள் கடன் வாங்கத் தூண்டப்பட்டனர்.

இது நிறுவனங்களின் கூடுதல் நேரச் செலவுகளில் தேவையற்ற அதிகரிப்பை நேரடியாகப் பாதித்தது என்று கணக்காய்வாளர் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெற்றோலியக்கூட்டுத்தாபனம் மற்றும் பெற்றோலியம்ஸ்டோரேஜ்டெர்மினல்நிறுவனம் ஆகியவற்றில் 4,200 பணியாளர்கள் உள்ளனர்.

எனினும் இந்த நிறுவனங்களுக்கு 500 பேரின் தேவை மாத்திரமே உள்ளது.

இதற்கிடையில் சபுகஸ்கந்தவில் உள்ள பெட்ரோலிய சுத்திகரிப்பு ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மேலதிக நேர கொடுப்பனவாக 20212022இல் 3 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்றும் கணக்காய்வாளரின் அறிக்கை கூறுகிறது.

## புதிய பயங்கரவாத தடை சட்டத்தால்...

போகுமென்ற அச்சம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருப்பதாகவும் கூறியுள்ளார்.

வடமராட்சியில் (08) ஊடகங்களுக்கு புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் குறித்து கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பாரிய பொருளாதாரச் சிக்கல் ஒன்று இந்த நாட்டை பீடித்திருக்கின்றது. அதிலிருந்து இந்த நாட்டை மீட்க போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி வருகின்றார். அவ்வாறு நாடு மீண்டதாக ஒரு மாயத் தோற்றம் ஏற்படுத்தப்படுகின்றது.

ஆனால் மிக விரைவிலே நாடு மிக மோசமான பொருளாதார சூழ்நிலைக்கு செல்ல இருக்கிறது. அப்படியான சந்தர்ப்பத்தில் திரும்பவும் மக்கள் போராட்டங்கள் வெடிக்கக்கூடும் என்ற காரணத்தினால் அதை கட்டுப்படுத்துவற்கு இந்தச் சட்டத்தை கொண்டு வருவதற்கு முயற்சிக்கின்றனர். ஏனெனில் கடந்த காலங்களைப் போன்று மீண்டும் மக்கள் போராட்டங்கள் ஏற்படுகின்ற பொழுது அதனைக் கட்டுப்படுத்த அல்லது ஒடுக்குவதற்கு தற்போது ஜனாதிபதியின் கையில் இருக்கின்ற சட்டங்கள் போதாது என்று அவர் கருதுகின்றார்.

அதேபோன்று, பயங்கரவாத தடை சட்டங்களை பிரயோகித்தால் சர்வதேச சமூகத்திற்கு கொடுத்த வாக்குறுதியை மீறுவதாக அமையும் என்பதாலே ஐரோப்பிய ஒன்றியத்தினால் கொடுக்கப்படுகின்ற ஜீ.எஸ்.பி வரிச் சலுகை கூட இல்லாமல் போகின்ற நிலைமை ஏற்படும். ஆகவே புதியதொரு நல்ல விடயத்தை தாங்கள் செய்வது போல மிக மிக மோசமான ஒரு செயலையே செய்வதற்கு முனைகின்றனர்.

குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதாக காட்டிக் கொண்டு அதனை விட மோசமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமென்ற இந்தச் சட்டத்தை கொண்டுவர முயற்சிக்கின்றனர். அதாவது பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குகிறேன் என்று ஒரு மாயத் தோற்றத்தை காட்டிக் கொண்டும் சர்வதேச நியமங்களுக்கு அமையவே புதிய சட்டத்தையே கொண்டு வருகிறேன் என்பதற்காகவே இந்த முயற்சி எடுக்கப்படுகிறது என அவர் தெரிவித்தார்.

## CPC வழங்குவதை விடவும்...

விலையில் எரிபொருளை விற்பனை செய்வதற்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

மூன்று நிறுவனங்களுடனான ஒப்பந்தங்கள் இந்த மாத இறுதியில் முடிவடையும், அதன்பிறகு ஒரு மாதத்திற்குள் அதன் செயற்பாடுகள் ஆரம்பமாகும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சீனாவின் சினோபெக், அவுஸ்திரேலியாவின் யுனைட்டட் பெற்றோலியம் மற்றும் அமெரிக்காவின் ஆர்.எம். பாக்ஸ் ஆகிய நிறுவனங்கள் இலங்கையில் எரிபொருள் சில்லறை விற்பனை சந்தையில் நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிறுவனங்கள், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விலையை விட குறைந்த விலையில் எரிபொருளை விற்க அனுமதித்தால், பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருளுக்கான தேவை குறையலாம்.

எனவே அரசாங்கத்தின் எரிபொருள் செலவும் குறைக்கப்படலாம் என்று அரச அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது அரசாங்கம் சராசரியாக மாதமொன்றுக்கு 450 மில்லியன் அமெரிக்க டொலர்களை எரிபொருளுக்காக செலவழித்து வருகிறது.

இந்த நிலையில் குறித்த மூன்று நிறுவனங்களும் சராசரியாக 120 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான எரிபொருளை மாதாந்தம் இறக்குமதி செய்யும் என அமைச்சு எதிர்பார்த்துள்ளது. இந்த நடவடிக்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன விற்பனையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும், ஆனால் வாடிக்கையாளர்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றும் அரச அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கைக்கு வரும் மூன்று நிறுவனங்களும் இறக்குமதிக்கான அமெரிக்க டொலர்களை திரட்ட உள்ளூர் வங்கிகளைப் பயன்படுத்துவதை நிறுவனங்கள் தவிர்க்க வேண்டும்.

அதே நேரத்தில் இலாபத்தை ஒரு வருடத்திற்குப் பின்னரே நாட்டிற்கு வெளியே எடுத்துச்செல்லமுடியும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

# நம் வாழ்வில் நல் முத்திரை பதிக்க சித்திரையே வா

## பலவகையான சம்பிரதாயங்களை கொண்ட புத்தாண்டு



கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி" என்ற பெருமைக்குரிய தமிழினம் ஆனது ஒவ்வொரு வருடமும் தமிழில் சித்திரை முதலாம் திகதியை வருடப்பிறப்பாக கோலாகலமாக கொண்டாடுகிறது.

இந்தியா, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் வாழும் உலக தமிழர்களால் இப் பண்டிகை சிறப்பாக கொண்டாடப் படுகிறது.

தமிழர்கள் ஆரம்ப காலங்களில் இருந்தே வானியல் ஜோதிடங்களில் சிறந்து விளங்கியதால் ஒரு தமிழ் ஆண்டு காலரீதியாக சிறப்பாக கணிப்பிட படுகின்றது.

அதாவது சூரியன் மேடராசியில் பிரவேசிக்கும் போது தொடங்கும் வருடம் மீன ராசியில் பிரவேசிக்கும் போது முடிவடைகின்றது. இதனடிப்படையில் பஞ்சாங்கங்களின் வாயிலாக தமிழ் புத்தாண்டானது கணிப்பிடப்படுகிறது.

### சைவ மஞ்சரி

சித்திரை மாதம் காலநிலை அடிப்படையில் வசந்த காலத்தின் ஆரம்பமாகும் இதனால் மக்கள் மகிழ்ச்சியோடு இப்புத்தாண்டை வரவேற்கின்றனர்.

தமிழ் புத்தாண்டின் வரலாறு சித்திரையின் மரபுகள் சிறப்புக்கள் என்பவற்றை இக்கட்டுரையில் காண்போம்.

தமிழர்கள் இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்தவர்கள். இதனால் பண்டிகைகளை பருவகாலங்களுக்கு ஏற்ப கொண்டாடினார்கள்.

தமிழர்களின் நாட்காட்டி 12 ராசிகளை அடிப்படையாக கொண்டதாகும். இதனால் ராசிகளில் முதலாவதான மேட ராசியில் சூரியன் முதல் நாள் தமிழர்களின் புதுவருடம் ஆகும்.

இதை ச ங்க இலக்கியமான நெடுநல்வாடை "திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக விண்ணுர்பு திரிதரும் வீங்கு செலல் மண்டிலத்து" குறிப்பிடுகிறது.

மேலும் அகத்தியாயிரம் புட்பவிதி நூலின் மூலம் சித்திரை முதல் நாளே தமிழ்புத்தாண்டு என்பதற்கான சான்றுகள் கிடைக்கப்பெறுகின்றன.

சித்திரை புத்தாண்டு பலவகையான சம்பிரதாயங்களை கொண்டதாகும். புத்தாண்டு ஆரம்பித்து விட்டால் வீடுகளில் மகிழ்ச்சிக்கு பஞ்சம் இருக்காது.

புத்தாடை வாங்குதல், மருத்துநீர் வைத்து நீராடல், இனிப்பு பண்டங்களை பரிமாறி கொள்ளல், பொங்கல் இடுதல், கைவிசேடம் பெறுதல் சுபநேரத்தில் புதிய தொழில்களை ஆரம்பித்தல், பெரியவரகளிடம் ஆசி பெறுதல்,

கிளித்தட்டு, ஊஞ்சல், மாட்டுவண்டில் சவாரி, ஏறுதழுவுதல் என தமிழர் பாரம்பரிய விளையாட்டுக்கள் வழிபாடுகளோடு மங்களகரமாக மக்கள் புத்தாண்டை வரவேற்பர்.

தமிழர்கள் உலகமெங்கும் புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் தமது பண்பாடான பண்டிகையை கொண்டாட தவறவில்லை.

தமிழ் மாதங்களிள் ஒவ்வொரு மாதங்களும் தனி சிறப்புடையன. அவற்றில் சித்திரை தனித்துவமானது. அம்மாதத்தின் பௌர்ணமி அன்று சித்திரை நட்சத்திரம் வருவதனால் இம்மாதம் சித்திரை என அழைக்கப்படுகிறது.

"சித்திரையே வா நம் வாழ்வில் நல் முத்திரை பதிக்க வா" என்று சொல்லும் மரபு காணப்படுகிறது இதன்மூலம் சித்திரையின் சிறப்பினை காணலாம். காலநிலை ரீதியாக சித்திரை சிறுமாரி என்று குறிப்பிடுவார்கள்.

இக்காலத்தில் நெல் விதைப்பில் சிறுபோகம் ஆரம்பமாவதுடன் விவசாயிகள் பயிர்செய்ய ஆரம்பிப்பார்கள். இவ்வாறு பல மகத்துவங்களை தன்னகத்தே கொண்டது இம்மாதமாகும்.

## சோபகிருது வருடப்பிறப்பு

**● வாக்கிய பஞ்சாங்கத்தின் படி**

புது வருடம் பிறக்கும் நேரம்: சித்திரை முதலாம் நாள் 14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02.03க்கு

**● விஷு புண்ணிய காலம்:**

வெள்ளிக்கிழமை முற்பகல் 10.03 இல் இருந்து பிற்பகல் 06.03 வரை



**● மருத்து நீர் வைத்தல்**

பஞ்சாங்கங்களில் குறிப்பிட்ட நேர இடை-வெளிக்கு அமைய, சிரசில் கொன்றை இலையும், காலில் புன்னை இலையும் வைத்து ஸ்தானம் செய்க.

**● புத்தாடை**

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி வெள்ளை நிறம் உள்ள பட்டாடை ஆயினும் வெள்ளை கரை அமைந்த புதிய பட்டாடை ஆயினும் அணிய வேண்டும்

**● புது வருட ஆபரணம்**

வாக்கிய பஞ்சாங்கத்தின் படி முத்து வைரம் இழைத்த ஆப-ரணம்

**● கைவிசேடம்**

வாக்கிய பஞ்சாங்கத்தின் படி சித்திரை 2 (15.04. 2023) சனிக்-கிழமை காலை 07.52 முதல் 09.00 மணி வரை சித்திரை 3 (16.04.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 07.49 முதல் 9.48 வரை

**● புதுக்கணக்கு**

வாக்கிய பஞ்சாங்கத்தின் படி சித்திரை 28 (11.05.2023) வியா-ழக்கிழமை பகல் 10.24 முதல் நண்பகல் 12.27 வரை

**● திருக்கணித பஞ்சாங்கப்படி**

சித்திரை மாதம் முதலாம் நாள் 14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 02 .59க்கு

**● விஷு புண்ணிய காலம்:**

வெள்ளிக்கிழமை முற்பகல் 10.59 இல் இருந்து மாலை 06.59 வரை

**● மருத்து நீர் தேய்த்தல்**



விஷு புண்ணிய காலத்-தில் பஞ்சாங்கங்களில் குறிப்-பிட்ட நேர இடைவேளையில் சிரசில் கொன்றை இலையும், காலில் புன்னை இலையும் வைத்து ஸ்தானம் செய்க.

**● புத்தாடை**

வெண்ணிற பட்டாடை ஆயினும் அல்லது மஞ்சள் கரை கொண்ட வெண்ணிற ஆடை அணிவது நல்லது.

04



கொழும்பு மட்டக்குளி கதிரான வத்தையில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயத்தின் வருஷாபிஷேக தேர்த்திருவிழா ஆலய பிரதமகுரு சிவ ஸ்ரீ பா,சிவநேசக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம் பெறுவதையும் இரதோற்சவம் வெளிவீதிஉல வருவதையும் கலந்துகொண்ட பக்த அடியார்களையும் படத்தில் காணலாம். (படப்பிடிப்பு: லியாகத் அலிகான்)

### அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

**சித்திரை மாதம் ஆண்டுக்கான பெரும் பொழுதில் எந்த காலத்தில் இருக்கிறது?**
*இளவேனில்*

**இந்தக் காலத்தை வேறு எவ்வாறு சொல்வார்கள்?**
*வசந்த காலம்*

**சித்திரகுப்தன் எவ்வாறு தோன்றியதாக புராணக்கதைகள் சொல்கின்றன?**
*சித்திரை மாதத்தின் சித்திரை நட்சத்திரத்தில் சிவபெருமான் சித்திரம் ஒன்று வரைய அதிலிருந்து தோன்றியதாக புராணக்கதைகள் சொல்கின்றன.*

**சித்திரை மாத திருதியை திதியில் மச்ச அவதாரம் (மீன் உருவம்) எடுத்தது யார்?** *மகா விஷ்ணு.*

**சித்திரை மாதம் சுக்கில பட்ச அஷ்டமியில் யார் அவதரித்ததாக தேவி பாகவதம் கூறுகிறது.** *அம்பிகை*

**ஸ்ரீ ராமன் எந்த மாதத்தில் அவதரித்தார்?** *சித்திரை*

**சித்திரை மாதத்தில் வளர்பிறை காலத்தில் எத்தனையாம் பிறை தோன்றும்?** *மூன்றாம்*

**மூன்றாம் பிறை தோன்றும் நாள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?** *அக்சய திருதியை*

## சங்கடஹர சதுர்த்தி

பங்குனி மாதத்தில், ஐயப்பனின் அவதார தினமும் வரும். ஸ்ரீராமபிரானின் அவதார நன்னாளும் வரும். ஸ்ரீவள்ளி அவதரித்ததும் பங்குனி மாதத்தில்தான். இத்தனைப் பெருமையும் புண்ணியமும் நிறைந்த மாதத்தில், விநாயகப் பெருமானை தினமும் வழிபட்டு வந்தாலே உன்னத பலன்கள் நமக்குக் கிடைக்கும் என்கிறார்கள் ஆச்சார்யப் பெருமக்கள்

எந்த தெய்வத்தை வணங்குவதாக இருந்தாலும் முதலில் பிள்ளையாரை வழிபட வேண்டும் என்று விவரிக்கிறது தர்மசாஸ்திரம். ஆகம விதிப்படியும் ஆலயங்களில், முதலில் பிள்ளையாரை வணங்குகிறோம். அதன் பின்னரே மூலவரை தரிசிக்கிறோம்.

எந்த தெய்வத்தை வணங்குவதாக இருந்தாலும் முதலில் பிள்ளையாரை வழிபட வேண்டும் என்று விவரிக்கிறது தர்மசாஸ்திரம். ஆகம விதிப்படியும் ஆலயங்களில், முதலில் பிள்ளையாரை வணங்குகிறோம். அதன் பின்னரே மூலவரை தரிசிக்கிறோம்.

விநாயகர், முழுமுதற் கடவுள் என்று போற்றப்படுகிறார். பிரமாண்டமான கோயிலிலும் பிள்ளையாரைத் தரிசிக்கலாம். தெருமுனைக் கோயிலிலும் கணபதி காட்சி தருவார். ஆற்றங்கரையிலும் குளக்கரையிலும் கூட, அரசமரத்தடி நிழலில் கூட பிள்ளையாரப்பா அற்புதமாகக் காட்சி தந்து, நமக்கு அருளையும் பொருளையும் அள்ளித்தந்தருளுகிறார் என்று போற்றுகின்றனர் பக்தர்கள்.

நம் விக்னங்களையெல்லாம் தீர்த்து அருளுகிறார். அதனால்தான் அவருக்கு விக்ன விநாயகர் என்றே திருநாமம் அமைந்தது. கணங்கள் என்றால் பொழுதுகள் என்று அர்த்தம். நம்முடைய ஒவ்வொரு கணத்துக்கும் அதிபதி பிள்ளையார்தான்.

அதனால்தான் அவருக்கு கணபதி எனும் திருநாமமும் அமைந்தது என்று சொல்லிச் சிலிர்க்கிறார்கள் ஆச்சார்யர்கள்.

இத்தனை பெருமைகள் கொண்ட பிள்ளையாருக்கு உகந்தது சங்கட ஹர சதுர்த்தி நன்னாள். நாளை, சங்கடஹர சதுர்த்தி. பங்குனி மாதத்தின் சங்கடஹர சதுர்த்தி. இந்த நன்னாளில், விரதம் இருந்து பிள்ளையாரை தரிசிப்போம். விநாயகர் அகவல் பாராயணம் செய்வோம். மகா கணபதி மந்திரம் ஜபித்து வேண்டிக்கொள்வோம்.

விநாயகப் பெருமானுக்கு அருகம்புல் சார்த்தி வேண்டிக் கொள்வது ரொம்பவே மகத்துவம் மிக்கது. அதேபோல், பிள்ளையாருக்கு வெள்ளெருக்கு மாலை சார்த்தி வேண்டிக் கொண்டால், நம் விக்னங்களெல்லாம் பறந்தோடும். கவலைகள் அனைத்தும் காணாமல் போகும். துக்கங்களையெல்லாம் போக்கித் தருவார் தும்பிக்கையான்!



கம்பளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பங்குனி உத்தர மஹோற்சவ தேர் திருவிழா நிகழ்வுகள் இடம்பெற்றதை படங்களில் கானலாம். (படம்: நாவலப்பிட்டி சுழற்சி நிருபர் டி. வசந்தகுமார்)



## தண்டாயுதபாணி ஆலய மஹா கும்பாபிஷேகம்

கேகாலை புளத்கொஹுபிட்டிய தண்ணிமலை ஸ்ரீ தண்டாயுதபாணி ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெற்றது. இதில் ஆலயத்தின் தலைவர் சுப்பிரமணியம் சிவக்குமார், தொழிலதிபர் மகேஸ்வரனுக்கும் அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியத் தலைவர் எஸ். விஜேக்கும் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 27ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரமழான் பிறை 18

### குறள் தரும் சிந்தனை



உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்
ஏதம் பலவும் தரும்

நெருங்கிய உறவினருக்கிடையே தோன்றும் உட்பகையானது அவர்களுக்குக் கேடு விளைவிக்கக் கூடிய பல துன்பங்களை உண்டாக்கும்.

## நாட்டை கட்டியெழுப்புவதற்கே முன்னுரிமை வழங்க வேண்டும்!

நாடு கடந்த வருடம் கடும் பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுத்தது. மக்கள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்தார்கள். குறிப்பாக எரிபொருள் மற்றும் எரிவாயுவுக்காக நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிலையில் ஒருபுறம் எரிவாயு மற்றும் எரிபொருட்கள் உட்பட அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துச் செல்ல, மறுபுறம் பால்மா உள்ளிட்ட பல பொருட்களுக்கு நாட்டில் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இந்நெருக்கடி நிலைக்குத் தீர்வு பெற்றுத் தருமாறு கோரி ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடத்தப்பட்டன. மக்களின் எதிர்பார்ப்புக்கு அவர்களால் நியாயமென ஏற்றுக் கொள்ளக் கூடியளவுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கக் கூடிய சூழலை அப்போதைய பொருளாதார நிலைமை அன்றைய ஆட்சியாளர்களுக்கு வழங்கவில்லை. மாறாகப் பொருளாதார நெருக்கடி உச்சத்தைத் தொட்டது. அதன் விளைவாக அன்றைய ஆட்சியாளர்கள் பதவி விலகினர்.

நாடு பொருளாதார ரீதியில் மிகவும் இக்கட்டான நிலைக்கு உள்ளாகியிருந்த வேளையில், நாட்டின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்க எவரும் முன்வராத சூழலில், ஜனாதிபதி பதவியை ரணில் விக்கிரமசிங்க ஏற்றார். அத்தோடு சேர்த்து பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறும் அழைப்பும் விடுத்தார்.

பொருளாதார நெருக்கடி என்ற இக்கட்டான சூழ்நிலைக்குள் நாடு தள்ளப்பட்டிருக்கும் சூழலில் அந்நிலையில் இருந்து நாட்டையும் மக்களையும் மீட்டெடுப்பதற்கு சகலரும் ஒன்றிணைந்து செயற்படுவது மிகவும் இன்றியமையாததாகும். அந்த அடிப்படையில் ஜனாதிபதி இவ்வழைப்பை விடுத்தார். அத்தோடு நின்றுவிடாது ஒன்றுபட்டு செயற்படுவதற்கான அவசியம் குறித்து எதிரணியினருடன் கலந்துரையாடல்களையும் அவர் முன்னெடுத்தார். ஆனாலும் எதிரணியினர் ஆக்கபூர்வமான பிரதிபலிப்புக்களை வெளிப்படுத்தவில்லை.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான வேலைத்திட்டங்களை திட்டமிட்ட அடிப்படையில் விரிவான முறையில் முன்னெடுக்கவும் ஜனாதிபதி தவறவில்லை. அதன் பிரதிபலன்களை குறுகிய காலத்துக்குள் நாடு கட்டம் கட்டமாக அடைந்து கொள்ளத் தொடங்கியது. இது பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு மீட்சி பெற்றுவருவதை வெளிப்படுத்தி நின்றது.

அந்த வகையில் எரிவாயு மற்றும் எரிபொருட்களை பெற்றுக் கொள்வதற்காக நாட்கணக்கில் நீண்ட வரிசைகளில் காத்திருக்கும் அசௌகரியம் விரைவாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. இன்று நாட்டில் அவ்வாறானதொரு அசௌகரியம் நிலவியதா? என்று வியக்கும் அளவுக்கு நிலைமை முன்னேற்றம் அடைந்துள்ளது. அத்தோடு எரிபொருட்கள் மற்றும் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் குறைவடைய ஆரம்பித்தன. கடந்த வாரம் கூட லாப் கேஸ் நிறுவனம் ரூ. 1290.00 இனாலும் லிற்றோ காஸ் நிறுவனம் ரூ. 1005.00 இனாலும் 12.5 நிறை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டரின் ஒன்றின் விலையைக் குறைத்துள்ளன. அந்தளவுக்கு பொருளாதாரம் மீட்சி பெற்றுள்ளது.

அதேநேரம் ரூபாவுக்கு நிகரான டொலரின் பெறுமதியும் கடந்த சில வாரங்களாக குறைவடைந்ததும் தெரிந்ததே. ஜனாதிபதி முன்னெடுத்துவரும் பொருளாதார வேலைத்திட்டங்களின் பிரதிபலன்களே இவை. அவரது பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் பிரதிபலன்களை அளித்து வருகின்ற அதேநேரம், அத்திட்டங்கள் மக்கள் மத்தியில் ஏற்கனவே ஏற்படுத்தியுள்ள நம்பிக்கைகளும் நாளுக்கு நாள் வளர்ச்சி பெற்று உறுதியடைந்து வருகின்றன.

இந்நிலையில் ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களை மேலும் பலப்படுத்துவதற்கு ஆதரவளித்து ஒத்துழைப்பு நல்கும் வகையில் எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்களும் தயாராகிவரும் சூழல் உருவாகியுள்ளது.

இவ்வாறான சூழலில் கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான டொக்டர் ராஜித சேனாரட்ன உரையாற்றும் போது, 'ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரத்தை மீட்டெடுப்பார் என்பதை நாம் தெளிவாக ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் நாம் குருடர்களாக இருக்க வேண்டும். இன்றுள்ள பிரச்சினை எதிர்க்கட்சியில் இருந்து ஆளுங்கட்சிக்கு செல்வதா? இல்லையா? என்பதல்ல. மாறாக நாட்டை மேம்படுத்துவதா? இல்லையா? என்பதே இன்றைய பிரதான விடயம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

அதுதான் உண்மை. நாட்டின் மீதும் மக்கள் மீதும் உண்மையான அன்பு கொண்டவர்கள் நாட்டுக்குத் தான் முன்னுரிமை அளிப்பார்கள். அதுதான் நாட்டின் இன்றைய தேவையும் கூட. இது அற்ப அரசியல் இலாபம் தேடக்கூடிய நேரகாலம் அல்ல. கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு நாட்டை முதலில் கட்டியெழுப்ப வேண்டும். அதற்காக ஆளும்கட்சி, எதிர்க்கட்சி பேதம் பார்க்கப்படலாகாது. அதுவே மக்களின் விருப்பமாகும்.

editor.tkn@lakehouse.lk

# தமிழ்நாட்டுக்கு வருகை தந்த பிரதமர் மோடியிடம் இலங்கைத் தமிழர் நலனை முன்வைத்த ஸ்டாலின்

தமிழகம் சார்ந்த பிரச்சினைகள் மட்டுமின்றி இலங்கைத் தமிழர்களின் நலன் குறித்தும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் விரிவாக பேசியிருக்கிறார் முதலமைச்சர் ஸ்டாலின். அதே போல் கச்சதீவை இலங்கையிடம் இருந்து திரும்பப் பெற வேண்டும் என்பதையும் நரேந்திர மோடியிடம் அழுத்தமாக வலியுறுத்தியுள்ளார் ஸ்டாலின்.

இந்தியப் பிரதமர் மோடி நேற்றுமுன்தினம் தமிழகத்துக்கு வருகை தந்து பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். அந்நிகழ்வுகளில் ஸ்டாலின் கலந்து கொண்டார்.

பிரதமர் மோடியிடம் மனுவொன்றை ஸ்டாலின் கையளித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி கைது செய்யப்படுகின்றனர். இந்திய மீனவர்கள் மற்றும் அவர்களது



மீன்பிடி படகுகள் இலங்கை அரசால் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்படுவது தமிழக மீனவர்கள் மத்தியில் கவலையையும் பாதுகாப்பின்மையையும் ஏற்படுத்தியுள்ளது. எனவே, பாக்குநீரிணை பகுதிகளில் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை பாதுகாத்து அவர்களின் பாதுகாப்பினையும் உறுதி செய்ய வேண்டுமென்று ஸ்டாலின் கேட்டுக் கொண்டுள்ளார்.

பாக்குநீரிணை பகுதியிலுள்ள இராமநாதபுரம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் வாழும் மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக நேரடியாக மீன்பிடித் தொழிலையே நம்பியுள்ளனர். இலங்கை கடற்படையின் தாக்குதல் இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை சீர்குலைக்கும். எனவே, கச்சதீவை இந்தியாவிற்கு திரும்பப் பெறுவது மற்றும் பாக்குநீரிணை வளைகுடா பகுதியில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளை மீட்டெடுப்பது ஆகியவை தமிழ்நாடு அரசின் முதன்மையான குறிக்கோளாக உள்ளது என்று மோடியிடம் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண கச்சதீவு மீட்கப்பட வேண்டும். இந்தியாவின் இறையாண்மையை மீட்டெடுப்பதன் மூலமே, பாரம்பரியக் கடற்பரப்பில் மீன்பிடிக்கும் உரிமையை மீட்டெடுக்க முடியும் என்பதை தமிழ்நாடு அரசு மீண்டும் வலியுறுத்துகிறது.

அதேவேளை இலங்கைத் தமிழர்களுக்கு சமமான குடிமுறை மற்றும் அரசியல் உரிமைகள் அளிப்பது தொடர்பாக இலங்கை அரசினை வலியுறுத்துமாறு இந்தியப் பிரதமரிடம் ஸ்டாலின் கையளித்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது. சென்னைக்கு வருகை தந்த பிரதமர் மோடிக்கு புத்தகம் ஒன்றை பரிசாக அளித்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்.



இதற்கு முன்னதாக, சென்னை விமான நிலையத்திற்கு வந்த பிரதமர் மோடியை கைகுலுக்கி, சால்வை அணிவித்து வரவேற்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின். பிரதமர் மோடி, முதல்வர் ஸ்டாலினின் கையை இறுகப் பற்றி நலம் விசாரித்தார். அப்போது பிரதமர் மோடிக்கு புத்தகத்தை பரிசளித்தார் முதல்வர் ஸ்டாலின். பிரதமர் மோடியை விமான நிலையத்தில் வரவேற்றபோது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிரதமருக்கு பரிசாக அளித்த புத்தகம், 'Gandhi's Travels in Tamilnadu' என்பதாகும்.

அ.ராமசாமி எழுதிய இந்தப் புத்தகத்தை பி.சி.ராமகிருஷ்ணன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். தென்னாபிரிக்காவில் இருந்து காந்தி இந்தியா திரும்பிய பிறகு, 1896ஆம் ஆண்டு அப்போதைய மெட்ராஸ் மாநிலத்துக்கு முதன் முறையாக காந்தி வருகை தந்தது முதல், சுதந்திரம் கிடைப்பதற்கு ஓராண்டுக்கு முன்பாக அவர் கடைசியாக சென்னைக்கு வந்தது வரையிலான காந்தியின் தமிழ்நாட்டு பயணங்கள் இந்த புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. மகாத்மா காந்திக்கு எதிராகவும், கோட்சேவிற்கு ஆதரவாகவும் சில பா.ஜ.க நிர்வாகிகள், ஆர்.எஸ்.எஸ் நிர்வாகிகள் கருத்துக்களை தெரிவித்து வந்த நிலையில், மோடிக்கு ஸ்டாலின் அளித்த இந்தப் புத்தகம் முக்கியத்துவம் பெறுகிறது.

அதன் பின்னர் சென்னை காமராஜர் சாலையில் உள்ள விவேகானந்தர் இல்லத்தில் உள்ள விவேகானந்தர் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார் பிரதமர் நரேந்திர மோடி. பிரதமர் மோடிக்கு, நினைவுப் பரிசாக விவேகானந்தர் சிலை வழங்கப்பட்டது.

இராமகிருஷ்ண மடத்தின் 125 ஆவது ஆண்டு விழாவில் உரையாற்றிய பிரதமர் மோடி, 'புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறலரிதே ஒப்புரவின் நல்ல பிற' என்ற திருக்குறளை மேற்கோள் காட்டிப் பேசினார்.

"பெண்கள் முன்னேற்றத்தை சுவாமி விவேகானந்தர் வலியுறுத்தினார். அவரது நோக்கத்தை அரசு நிறைவேற்றி வருகிறது. இந்தியா குறித்த சிறப்பான தொலைநோக்கு பார்வையை விவேகானந்தர் கொண்டிருந்தார். தங்கள் மீதான தடைகளை பெண்கள் தகர்த்தெறிந்து வருகின்றனர். விவேகானந்தர் வலியுறுத்திய பெண்கள் முன்னேற்றத்தை மத்திய அரசு நிறைவேற்றி வருகிறது. விவேகானந்தரை ஹீரோ போல வரவேற்ற இடம் தமிழ்நாடு" என்றார் மோடி.

# தொட்டவத்தை பள்ளிவாசல் மையவாடி காணி வக்பு நிகழ்வு

"மறைந்த தொழிலதிபர் மர்ஹூம் தர்மகர்த்தா மக்கீன் அவர்களின் நோக்கங்களையும் சிந்தனைகளையும் அன்னாரின் பிள்ளைகள் சிறப்பாகவே முன்னெடுத்து வருகின்றனர். பள்ளிவாசல் மையவாடியின் விரிவாக்கத்துக்காக காணி வக்பு செய்யப்படுவது மிகவும் உன்னதமான தர்மம் ஆகும்" என முகத்தமுஷ் ஷாதுலி மௌலவி எம்.இஸட். ரிஸ்கான் முஹம்மத் தெரிவித்தார்.

முன்னாள் தர்மகர்த்தா தொழிலதிபர் தேசகீர்த்தி மர்ஹூம் ஏ.டபிள்யு.எம்.மக்கீன் அவர்கள் உலகைவிட்டுப் பிரிந்து எதிர்வரும் ஏப்ரல் 27 ஆம் திகதி ஒன்பது வருடங்கள் நிறைவடைகின்றன. அன்னாரின் பேரில் பள்ளிவாசல் மையவாடி விஸ்தரிப்புக்கு காணி வக்பு செய்யப்பட்டது. இதற்கான ஆவணத்தை அன்னாரின் பேரன் சிமர் மில்பர் பள்ளிவாசல் பரிபாலன சங்கத் தலைவர் இம்தியாஸ் முஸம்மிலிடம் கையளித்தார்.

பாணந்துறை தொட்டவத்தை ரௌழதுல் அத்கிய்யா பள்ளிவாசல் மையவாடிக்கான காணி வக்பு நிகழ்வு பள்ளிவாசல்கள் பரிபாலன சங்க தலைவர் முஸ்லிம் விவாகப் பதிவாளர் இம்தியாஸ் முஸம்மில் தலைமையில் ஜும்ஆவுக்குப் பின்னர் இடம்பெற்றது.



**மறைந்த தொழிலதிபர் மர்ஹூம் மக்கீன் அவர்களின் பேரனால் ஆவணம் கையளிப்பு**

இந்த நிகழ்வில் உரையாற்றிய வேறவத்த மஸ்ஜிதுல் பத்ர் பள்ளிவாசல் கதீப் முகத்தமுஷ் ஷாதுலி மௌலவி ஏ.இஸட். ரிஸ்கான் முஹம்மத் (ஸெய்லானி) அவ்வாறு தெரிவித்தார்.

"இஸ்லாமிய வரலாற்றில் வக்பு எனும் உயர்ந்த செயலுடன் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. சரித்திரப் புகழ்மிக்க மக்கமா நகரிலுள்ள மஸ்ஜிதுன் நபவி பள்ளிவாசலின் விஸ்தீரணத் தேவைக்காகவும் காணி வக்பு செய்யப்பட்டதை இஸ்லாமிய வரலாறுகளில் காண முடிகின்றது. இந்த நிகழ்வில் இடம்பெற்ற பள்ளிவாசல் மையவாடிக்கான காணி வக்பு செய்தமையும் இந்த வழிகாட்டலுக்கேற்ப மேற்கொள்ளப்பட்ட சிறந்த கைங்கரியம் போன்றது" எனவும் அவர் தெரிவித்தார்.

மறைந்த மக்கீன் அவர்களின் சமூக, கல்வி,கலாசாரம் மற்றும் தொழிற் பயிற்சி அபிவிருத்தி என்ற எண்ணக்கருவின் அடிப்படையில் 'மகீஸா மஹால்' (MAKEEZA MAHAL) கலாசாலை உருவாக்கப்பட்டது. ஸாஹிரா மக்கீன் பவுண்டேஷனால் நிர்வகிக்கப்படும் இந்த கலையகம் ஹாஜியானி ஸாஹிரா மக்கீன் தலைமையில் மில்பர் மக்கீன், மிஸ்வர் மக்கீன் ஆகியோரினால் 2019 ஆம் ஆண்டில் திறந்து வைக்கப்பட்டது. இங்கு குர்ஆன் மத்ரஸா, தொழிற் பயிற்சி தொகுதி மற்றும் கல்யாண வரவேற்பு மண்டபமும் அமைந்துள்ளது. இதனால் பொதுமக்கள் பெரும் பயனடைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கட்டடத் தொகுதியில் பாடசாலை மாணவர்களுக்கான திட்டமிடப்பட்ட பல்வேறு விஷேட பாடங்கள், கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. முறையான குர்ஆன் பாடசாலையும் இடம்பெறுவதுடன் மாணவிகளுக்கான மனையியல்கலை பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன. இந்தக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள மண்டபப் பிரிவொன்று மக்களின் திருமணம் உள்ளிட்ட வைபவங்கள மற்றும் பொது நிகழ்வுகளுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

சமூகம் தொடர்பிலான அன்னாரின் எண்ணங்களையும் நோக்கங்களையும் அவரின் பிள்ளைகள் சிறப்புடன் முன்னெடுத்து வருகின்றமை பெரிதும் பாராட்டத்தக்கதும் மகிழ்ச்சிக்குரியதாகும். மர்ஹூம் மக்கீன் அவர்களின் பேரன் சிமர் மில்பர் அன்னாரின் பேரிலான வக்பு ஆவணத்தை பள்ளிவாசல் பரிபாலன சங்க தலைவர் இம்தியாஸ் முஸம்மிலிடம் கையளித்தார்.

நிகழ்வில் மிஸ்வர் மக்கீன், பள்ளிவாசல் பிரதம கதீப் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எம்.ரீ.எம்.இழ்யாஸ், கதீப் மௌலவி எம்.ஏ.எம்.ஹுசைன், எம்.என்.எம்.இப்திகார், சில்மி சஹீல் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்...**
(பாணந்துறை)

# நந்தவனம் பவுண்டேசன் சித்திரைத் திருவிழா

நந்தவனம் பவுண்டேசன் நடத்திய சித்திரைத் திருவிழா நிகழ்ச்சி திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள பிரீஸ் டெசிடென்சியில் நேற்றுமுன்தினம் மாலை சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு பப்ளிக் இமேஜ் டிஸ்ப்ளே ரோட்டரி மாவட்டம் 3000 இயக்குநரும், இனிய நந்தவனம் மாத இதழ் ஆலோசகரும், ஸ்ரீரங்கம் நகர நலச்சங்க மக்கள் தொடர்பாளருமான ரொட்டேரியன் டொக்டர் கே.சீனிவாசன் தலைமையேற்க, நந்தவனம் பவுண்டேசன் தலைவர் நந்தவனம் சந்திரசேகரன் அனைவரையும் வரவேற்றார்.

ரோட்டரி முன்னாள் ஆளுநர் மருத்துவர் ஜமீர் பாட்சா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உடலில் உறுதி வேண்டும் என்றத் தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

அவர் பேசும்போது " மனிதனுக்கு ஆரோக்கியம் முக்கியமானது , நமது உடலில் உறுதி வேண்டுமானால் முதலில் மனதில் மகிழ்ச்சி இருக்க வேண்டும். அடுத்து ஆரோக்கியமான சத்தான உணவை எடுத்துக்கொள்ள வேண்டும். உடற்பயிற்சிஅல்லது யோகாசனம் செய்து உடலை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

'மனதில் உறுதி வேண்டும்' என்ற தலைப்பில் திருச்சி மகளிர் சிறைத்துறைக் கண்காணிப்பாளர் திருமதி ருக்மணி பிரியதர்ஷினி உரையாற்றினர்.

அவர் பேசும்போது "நாம் ஒவ்வொரும் வாழ்க்கையில் நேர்மையைக் கடைப்பிடிக்க வேண்டும். நேர்மைதான் நம்மை மனஅமைதியுடனும் மனஉறுதியுடனும் வாழவைக்கும். நாம் குற்றமற்றவர்களாக தலைநிமிர்ந்து நிற்க மனவலிமை வேண்டும். ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் மனஉறுதியுடன் உழைத்தால் வெற்றி பெறலாம்" என்று குறிப்பிட்டார்.







'வேர்கள்' அறக்கட்டளையின் தலைவர் சூ. அடைக்கலராஜ் வாழ்த்துரை வழங்கினார்.

சித்திரைத் திருவிழாவின் சிறப்பு நிகழ்வாக 'கவிஞர்களின் கற்பனைக் கருவூலங்கள்' என்ற தலைப்பில் காயரங்கம் நடைபெற்றது. கப்பல் கவிஞர் கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் ஆலம் தமிழ்ப்பித்தன், ஜனனி அந்தோனிராஜ், ஜா. சலேத், கவி செல்வா, கலைமணி, வடுவூர் சிவ முரளி ஆகியோர் கவிதை வாசித்தனர்.

இறுதியாக மருத்துவ கலாநிதி வே.த. யோகநாதன் நன்றி கூறினார். நந்தவனம் பவுண்டேசன் பொருளாளர் பா.தென்றல் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.

# பாதுகாப்பு அமைச்சின், மாணவச் சிப்பாய் படையணிகளின் ஒருநாள் பயிற்சிப் பாசறை

இலங்கை பாதுகாப்பு அமைச்சானது முப்படைகள் மற்றும் பொலிஸாரின் துணையுடன் மாணவச் சிப்பாய் படையணிகளை பாடசாலைகள் தோறும் உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்தியும் வருகின்றது.

மாணவர்களை நவீன சவால்கள் மற்றும் போதைப்பொருள் பாவனை, மனஅழுத்தங்களில் இருந்து விடுபட வைத்தல், உடல் வலிமை, மனவலிமையை மேம்படுத்தி நாட்டுக்கு நற்பிரஜையாக மாற்றியமைத்தல் எனும் தொனிப் பொருள்களில் அமைந்த இந்த ஒருநாள் பயிற்சிப் பாசறை அம்பாறை, 17 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி லெப்டினன்ற் கேர்ணல்

டப்ளியு.எல்.பி.விஜே சுந்தர தலைமையில் அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. அம்பாறை 17 ஆவது படைப்பிரிவின் ஜி. கம்பனி கடேற் மாணவர்களுக்கான ஒருநாள் பயிற்சிப்பாசறை அம்பாறை 17 ஆவது படைப் பிரிவின் பயிற்சி அதிகாரி கப்டன் எம்.ரி.நௌஸாத் வழிகாட்டலில், அக்கரைப்பற்று_ திருக்கோவில் வலயங்களுக்குப் பொறுப்பான கொம்பனி கொமாண்டர் லெப்டினன்ற் ஏ.எம்.எம். கியாஸ் நெறிப்படுத்தலில் நடைபெற்றது. இப்பயிற்சிப் பாசறையில் அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் கடேற் மாணவர்கள் பங்குபற்றினர்.



இப்பயிற்சி நிகழ்வுக்கு அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை அதிபர் ஏ.பி. முஜீன், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அதிபர் ஏ.சி.எம்.ஹரிஸ், ஒலுவில் அல்ஹம்றா மகாவித்தியாலய அதிபர் அஷ்ஷெய்க் யு.கே. அப்துர் றஹீம் ஆகியோர் வருகை தந்து மாணவர்களை உட்சாகமூட்டினர்.

**அஷ்ரப் கான்...**
(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

பெருந்தோட்ட அமைச்சு

# இலங்கைத் தேயிலைச் சபை

தேயிலை ஆணையாளர் பிரிவு

## பச்சை தேயிலைக்கான நியாயமான விலையை செலுத்துதல்

## 2023 மார்ச் மாதம்

1993 ஆம் ஆண்டின் இல 03 கீழ் திருத்தப்பட்ட சட்டம் 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க தேயிலை கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 8 (2) ன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு ஏற்ப 2023 மார்ச் மாதத்தில் பதிவு செய்யப்பட்ட தேயிலை உற்பத்தியாளர்களால் கொள்முதல் செய்யப்பட்ட பச்சை தேயிலைக்கான நியாயமான விலை கீழ்க் கொடுக்கப்பட்டுள்ளவாறு அறிவிக்கப்படுகின்றது.

| தொடர் இல. | பதிவு இல. | தொழிற்சாலையின் பெயர் | சில்லரை விலை மார்ச் |
|---|---|---|---|
| பதுளை மாவட்டம் | | | |
| 1 | MF0777 | பிட்ட இரத்மலே | 199.83 |
| 2 | MF0983 | ஹப்புதளை | 193.90 |
| 3 | MF0269 | தம்பேதென்ன | 193.20 |
| 4 | MF1293 | லக்கி லேண்ட் | 190.79 |
| 5 | MF0739 | கர்கிலிஸ் | 188.55 |
| 6 | MF0302 | உளுகெதர | 185.24 |
| 7 | MF1595 | இரநாயா | 184.69 |
| 8 | MF0217 | எல்டெப் | 182.41 |
| 9 | MF0253 | வேவெஸ்ஸ | 180.34 |
| 10 | MF1203 | ஊவா ஹல்பேவத்த | 177.17 |
| 11 | MF0105 | கனவரெல்ல | 177.15 |
| 12 | MF0235 | நயாபெத்த | 176.89 |
| 13 | MF0988 | சரினா குரூப் | 175.86 |
| 14 | MF0573 | ருக்காதென்ன | 175.50 |
| 15 | MF0712 | ப்லேயார்ல்மன்ட் | 173.50 |
| 16 | MF0821 | க்ளெனோர் | 170.99 |
| 17 | MF0581 | அயிஸ்லெபி | 167.54 |
| 18 | MF1590 | கோல்ட் பட்ஸ் ஊவா டீ | 167.13 |
| 19 | MF0637 | உடுவர | 165.53 |
| 20 | MF0041 | தேபெத்த | 165.35 |
| 21 | MF0974 | ஹப்புகஹவத்த | 165.22 |
| 22 | MF0683 | கிரேக் | 164.23 |
| 23 | MF0215 | மீதும்பிட்டிய | 163.28 |
| 24 | MF0720 | கோனமோட்டாவ | 162.09 |
| 25 | MF0382 | திக்வெல்ல | 161.90 |
| 26 | MF0986 | மஹதொவ | 159.68 |
| 27 | MF1534 | பஸ்ஸர தே சக்தி | 159.50 |
| 28 | MF0381 | சவுதம் | 159.38 |
| 29 | MF0667 | க்ளேன் எல்பின்ஸ் குரூப் | 158.28 |
| 30 | MF0677 | ஸ்பிரிங்வெலி குரூப் | 158.22 |
| 31 | MF1524 | எம்புரோய்ஸ்சா | 158.10 |
| 32 | MF0488 | வெருளுபத்தன | 157.54 |
| 33 | MF0598 | ஷோலன்ட்ஸ் | 157.51 |
| 34 | MF0494 | அம்பிட்டிகந்த | 155.98 |
| 35 | MF0371 | பட்டவத்த | 155.25 |
| 36 | MF0678 | தெலெபெத | 154.11 |
| 37 | MF0596 | அடாவத்த | 153.26 |
| 38 | MF0972 | கெப்பட்டிபொல தே சக்தி | 150.38 |
| 39 | MF0214 | அம்பேதென்ன | 149.62 |
| 40 | MF0243 | கினலன் | 149.52 |
| 41 | MF0329 | ஊவா மொரகல்ல | 149.34 |
| 42 | MF0234 | கோனகெலே | 146.21 |
| 43 | MF1000 | ரோபெரி | 146.03 |
| 44 | MF0388 | கம்பஹா | 144.80 |
| 45 | MF0572 | ஹோப்டன் | 140.74 |
| 46 | MF0668 | ஹிந்தகல | 139.03 |
| 47 | MF0522 | நிவ் ரொஸ்லன்ட் | 128.07 |
| 48 | MF0292 | பூணாகல | 104.85 |
| கொழும்பு மாவட்டம் | | | |
| 1 | MF1264 | அவிஸ்ஸாவெல்ல | 221.85 |
| காலி மாவட்டம் | | | |
| 1 | MF1420 | லக்கீ கொட்டாவ | 229.85 |
| 2 | MF1501 | சிஹாரா | 219.50 |
| 3 | MF1548 | சுவிஸ்க்கா | 216.53 |
| 4 | MF1346 | மஹகெதர | 214.18 |
| 5 | MF1434 | லியோட்டா | 213.81 |
| 6 | MF1342 | எவர்கிரின் | 213.79 |
| 7 | MF0862 | வீவருகொட | 213.43 |
| 8 | MF1367 | வத்துரவில | 213.24 |
| 9 | MF1396 | ஹிமாரா | 213.08 |
| 10 | MF0184 | ரேகடஹேன | 211.92 |
| 11 | MF1373 | மொரகெட்டிய | 211.60 |
| 12 | MF1338 | யக்கலமுல்ல | 211.46 |
| 13 | MF1319 | தல்கம்பளை | 210.89 |
| 14 | MF0861 | வவுலுகல | 210.54 |
| 15 | MF1139 | ஜெஸ்மின்வெலி | 210.35 |
| 16 | MF1389 | கராகொட | 209.82 |
| 17 | MF1353 | ஹில்கார்டன் | 209.73 |
| 18 | MF1252 | வெளிஹேன | 209.60 |
| 19 | MF1475 | முஸ்வென்ன | 208.07 |
| 20 | BF0181 | இரத்ன | 207.95 |
| 21 | MF1307 | குருந்துவத்த | 207.83 |
| 22 | MF1303 | நில் கந்துர | 207.73 |
| 23 | MF1540 | சேரன்யா | 207.64 |
| 24 | MF1300 | இம்புல்கஹகொட | 207.39 |
| 25 | MF1341 | துளிஎல்ல | 207.23 |
| 26 | BF0035 | ஹில் சயிட் | 207.16 |
| 27 | MF1411 | சுசன்த | 207.10 |
| 28 | MF1393 | நிவ் உடுமுல்லகொட | 206.99 |
| 29 | MF0907 | கெட்டந்தொல | 206.62 |
| 30 | MF0908 | கெப்டன் கார்டன் | 206.37 |
| 31 | MF1371 | நயிந்தாவ | 204.53 |
| 32 | MF1332 | குருப்பனாவ | 203.75 |
| 33 | MF1398 | அத்துகோரளை | 203.44 |
| 34 | MF1494 | பரகொடகந்த | 203.44 |
| 35 | MF1452 | மஹலியத | 203.09 |
| 36 | MF0321 | தலங்கஹ | 202.05 |
| 37 | MF1314 | நெலுவ மெதகம | 201.81 |
| 38 | MF1195 | கோல்டன் லீ∴ப் | 201.80 |
| 39 | MF1328 | மஹாம்பான | 201.24 |
| 40 | MF1497 | கன்னேலிய | 201.01 |
| 41 | MF0954 | மொரகல்ல | 200.86 |
| 42 | MF1006 | இத்தேகல | 200.66 |
| 43 | BF0149 | காலு கங்கபட | 200.34 |
| 44 | MF1251 | ஈரமுல்ல | 200.15 |
| 45 | MF1439 | எக்வின் | 200.09 |
| 46 | MF1323 | டேவிட்சன் | 199.66 |
| 47 | MF1186 | தேவகிரி | 199.54 |
| 48 | MF1253 | மஹேஸ்லன்ட் | 199.24 |
| 49 | MF0142 | சிரிமேவன | 199.18 |
| 50 | MF1400 | மிரிஸ்வத்த | 199.13 |
| 51 | MF1376 | சௌபாக்யா | 198.19 |
| 52 | MF1437 | தெல்லேவ | 198.14 |
| 53 | MF1361 | உடுஎல்ல | 198.03 |
| 54 | MF1333 | ஹிங்குல்கொட | 197.32 |
| 55 | MF1427 | மெனிக்கந்த | 197.24 |
| 56 | MF1330 | ஹல்விட்டிகல | 196.91 |
| 57 | MF0079 | சனச | 196.75 |
| 58 | MF1447 | இரன்சவி | 196.58 |
| 59 | BF0178 | நிவ் கொட்டாவ வெலி | 196.31 |
| 60 | MF0815 | வலஹந்துவ தே சக்தி | 196.03 |
| 61 | BF0120 | கிரேஸ்லேன்ட் | 195.77 |
| 62 | MF1386 | மிஹிதும் வெலி | 195.68 |
| 63 | MF1370 | ருஹுணு | 195.31 |
| 64 | MF0128 | பிம்புராகல | 195.30 |
| 65 | MF0655 | பத்தேகம | 195.00 |
| 66 | BF0187 | நிவ் சிங்ஹவெலி | 195.00 |
| 67 | MF1271 | முஸ்ஸெந்தபொத்த | 194.46 |
| 68 | MF1511 | ஜெயசிங்ஹ | 194.37 |
| 69 | MF1422 | இவிஹில்ஸ் | 193.41 |
| 70 | MF1401 | ஜனஹித்த | 193.25 |
| 71 | MF1375 | தனவல | 193.12 |
| 72 | BF0172 | விஜய | 191.91 |
| 73 | MF1380 | கங்கசிரி | 191.16 |
| 74 | MF1170 | இவிவெலி | 191.03 |
| 75 | MF1359 | திலக்க | 190.93 |
| 76 | MF1350 | பட்டுவங்கல | 188.10 |
| 77 | MF1334 | மாரகந்த | 187.19 |
| 78 | MF1543 | சம்ரின் | 183.09 |
| 79 | MF1510 | எகில்மா | 182.87 |
| 80 | MF0080 | வெஹிஹேன | 182.70 |
| 81 | MF1526 | ஹினிதும ஹில்ஸ் | 182.25 |
| 82 | MF1311 | சில்வெரி | 181.24 |
| 83 | MF0446 | குருகந்த | 180.99 |
| 84 | MF1404 | தொட்டுபலவத்த | 180.95 |
| 85 | MF1409 | இரந்தெனிய | 180.75 |
| 86 | MF1473 | கெல்லபத்த | 179.62 |
| 87 | MF1364 | இரத்கந்த | 179.21 |
| 88 | MF1306 | சினேத் | 179.13 |
| 89 | MF0751 | திசர | 178.76 |
| 90 | MF1504 | எல்பிட்டிய தே சக்தி | 178.57 |
| 91 | MF1549 | இரன்மீர் | 176.91 |
| 92 | MF0101 | இத்தமல்தெனிய | 175.43 |
| 93 | MF1378 | வினோவில் | 174.28 |
| 94 | MF0124 | இரசோட்டா | 167.19 |
| 95 | BF0116 | தல்கஸ்யாய | 166.87 |
| 96 | MF0756 | தொடங்கஹ | 166.61 |
| 97 | MF1529 | கிரின்வின் | 165.05 |
| 98 | MF1318 | சினென்சிஸ் | 157.46 |
| 99 | MF1421 | இலக்மலி | 157.08 |
| 100 | MF1384 | நெகினிகல | 154.42 |
| 101 | MF0259 | குடாமலான | 153.64 |
| 102 | MF1315 | றுவன்தென்ன | 147.59 |
| ஹம்பாந்தோட்டை மாவட்டம் | | | |
| 1 | MF1564 | நிவ் ஹதுகல | 177.17 |
| களுத்துறை மாவட்டம் | | | |
| 1 | MF1435 | கலத்தர | 220.75 |
| 2 | MF1476 | நிவ் ஜே.எஸ்.பி | 212.40 |
| 3 | MF1527 | கங்கானி | 202.35 |
| 4 | MF1565 | லிஹினியாவ | 202.00 |
| 5 | MF1280 | மிஹிரிகெலே | 199.52 |
| 6 | MF1557 | எச்.பீ.பீ. | 198.90 |
| 7 | MF1594 | இரத்மல்கொட | 196.68 |
| 8 | MF1563 | புலத்சிங்ஹல | 195.27 |
| 9 | MF1544 | ஹெடிகல்ல | 190.95 |
| 10 | MF1455 | துன்தொல | 190.72 |
| 11 | MF1481 | ரைகம் கோரளே தே சக்தி | 189.12 |
| 12 | MF0365 | ஹாட்லி | 187.28 |
| 13 | MF1503 | ஹலேவென்ன | 183.28 |
| 14 | MF1472 | சுணில்ஸ் | 180.53 |
| 15 | MF0147 | ரையிகம | 175.21 |
| 16 | BF0183 | பதுரலிய | 174.59 |
| 17 | MF1310 | கல்லுமலே | 174.55 |
| 18 | MF1477 | மொரபிட்டிய | 172.07 |
| 19 | MF1465 | புரோம்பில்ஸ் | 168.57 |
| 20 | MF1538 | நெலுவ தினியாவெல | 162.32 |
| 21 | MF1558 | அருண | 160.42 |
| 22 | MF1399 | நில் கஹஹேன | 147.05 |
| 23 | MF1479 | ஹேனதென்ன | 105.26 |
| 24 | MF1584 | கொழம்பராச்சி | 105.26 |
| கண்டி மாவட்டம் | | | |
| 1 | MF0697 | நயாபன | 192.65 |
| 2 | MF0013 | நிவ் பீகொக் குரூப் | 192.19 |
| 3 | MF0416 | அப்பர் லென்டர்ன் ஹில் | 183.20 |
| 4 | MF1596 | லிவர்பூல் | 182.12 |
| 5 | MF0608 | கிரேக்ஹெட் | 179.04 |
| 6 | MF0897 | டக்வாரி | 178.47 |
| 7 | MF1513 | நிவ் பத்தேகம | 177.61 |
| 8 | MF0866 | வெஸ்ட் ஹோல் | 175.66 |
| 9 | MF1181 | பல்லேகம | 174.74 |
| 10 | BF0043 | நிவ் வெலிகங்க | 171.18 |
| 11 | BF0028 | ஒரேன்ஜ் பீல்ட் | 170.24 |
| 12 | MF1257 | அப்லன்ட்ஸ் | 168.86 |
| 13 | MF0561 | குருந்துவத்த | 168.20 |
| 14 | MF0616 | டாட்ர் | 167.61 |
| 15 | MF0007 | கலமுதுன | 166.41 |
| 16 | BF0170 | நில்தலுகந்த | 165.94 |
| 17 | MF0164 | இம்புல்பிட்டிய | 164.47 |
| 18 | MF0553 | மோஸ்விலா | 162.94 |
| 19 | MF0402 | எல்பிட்டிய | 162.01 |
| 20 | MF0864 | மஹவில | 159.50 |
| 21 | MF0341 | இங்குருகல | 159.20 |
| 22 | MF1461 | எம்பில்மீகம | 158.10 |
| 23 | MF0286 | கல்லேபொக்க | 157.56 |
| 24 | MF0093 | என்கொம்புர | 157.09 |
| 25 | MF0602 | டெல்டா | 156.48 |
| 26 | MF1521 | கிரிமெட்டிய | 154.60 |
| 27 | MF0967 | கெட்டகஹவல | 154.27 |
| 28 | MF0094 | நிவ் அம்பிட்டிகந்த | 154.03 |
| 29 | MF1509 | தெஹிகம | 153.23 |
| 30 | MF1426 | பரகல்ல | 152.40 |
| 31 | MF0127 | கிங்ஸ்வெலி | 151.58 |
| 32 | MF0255 | நிவ் கெஹெலிய குரூப் | 149.90 |
| 33 | BF0165 | தெஹிவத்த | 149.48 |
| 34 | MF0132 | எரின் | 149.47 |
| 35 | MF0150 | நிவ் ஒரியன் | 148.76 |
| 36 | BF0132 | ரொஸ்லின் ஹில் | 148.61 |
| 37 | MF1523 | உதயகந்த | 147.84 |
| 38 | MF0020 | குருகம | 147.56 |
| 39 | MF0604 | லூல்கந்துர குரூப் | 147.54 |
| 40 | BF0171 | நிவ் ∴பர்ல்லன்ட் | 146.34 |
| 41 | MF0148 | இராக்ஷாவ | 146.10 |
| 42 | BF0020 | வட்டதெனிய | 145.29 |
| 43 | MF1247 | ஸ்டோர்பீல் | 144.43 |
| 44 | BF0123 | கல்பாய | 143.98 |
| 45 | MF0173 | பரனகல | 142.19 |
| 46 | MF1035 | சியோன் ஹில் | 137.07 |
| 47 | MF1235 | லென்டர்ன் ஹில் | 136.60 |
| 48 | MF1585 | மெணிக்திவெல | 134.54 |
| 49 | BF0111 | பிலிமதலாவ | 132.51 |
| 50 | MF0024 | பொலகல | 125.10 |
| 51 | MF0634 | அலகல்ல | 124.50 |
| 52 | MF0817 | யஹலதென்ன | 121.74 |
| 53 | MF1082 | ரின்க்வுட் | 119.59 |
| கேகாலை மாவட்டம் | | | |
| 1 | MF0293 | களணி | 197.69 |
| 2 | MF1579 | தெரணியகல தே சக்தி | 185.15 |
| 3 | MF0236 | பம்பேகம | 181.78 |
| 4 | MF0085 | நூரி | 179.65 |
| 5 | MF0626 | ஹல்கொல்ல | 176.98 |
| 6 | MF1297 | இலுக்தென்ன | 175.90 |
| 7 | MF1580 | கித்துல்கல | 170.04 |
| 8 | MF1528 | மிசா | 168.81 |
| 9 | MF0353 | யட்டிதேரிய | 168.44 |
| 10 | MF1304 | கெஹெல்வல | 167.23 |
| 11 | MF0472 | என்டேரபொல | 166.71 |
| 12 | MF1316 | கொலொன்ன | 164.39 |
| 13 | MF0267 | நிவ் மவுன்ட் கர்மல் | 158.49 |
| 14 | MF1546 | இரம்புக்கன்ன | 156.60 |
| 15 | MF0903 | மாலிபொட | 151.44 |
| 16 | MF1599 | கெனோரா | 135.32 |
| 17 | MF0895 | தோத்தல் ஓய | 134.08 |
| மாத்தளை மாவட்டம் | | | |
| 1 | MF0722 | ஹாத்தளை | 163.19 |
| 2 | MF0724 | மிட்லேண்ட்ஸ் | 151.12 |
| 3 | MF0344 | மாத்தளை வெஸ்ட் | 149.41 |
| 4 | MF1413 | மவுன்ட் எலீசா | 147.76 |
| மாத்தறை மாவட்டம் | | | |
| 1 | BF0138 | போத்தொட்டுவ | 236.29 |
| 2 | MF1468 | நில்ரிச் | 232.74 |
| 3 | MF1450 | ரொட்டும்ப | 229.33 |
| 4 | MF1337 | லும்பிணி | 226.88 |
| 5 | MF1274 | பெருபேபுல | 225.87 |
| 6 | BF0157 | ஆபர் வெலி | 225.59 |
| 7 | MF1331 | தம்பஹல | 225.49 |
| 8 | BF0173 | டெவோனியா | 225.01 |
| 9 | MF0437 | கந்தேதொல | 224.98 |
| 10 | MF1507 | சன்ரைஸ் | 223.89 |
| 11 | MF1270 | பியோல்ட்டா | 219.02 |
| 12 | MF1502 | நில்கிரி | 218.43 |
| 13 | MF1275 | தெனியாய நிவ் | 217.16 |
| 14 | MF1410 | குணவர்தன | 216.94 |
| 15 | MF1428 | ∴போசூன் | 216.65 |
| 16 | MF1322 | பஸ்கொட | 216.38 |
| 17 | MF1415 | சியேன்ட்டா | 216.26 |
| 18 | MF1041 | கலபொட | 215.84 |
| 19 | MF0440 | ஊறுவல | 215.18 |
| 20 | MF1407 | போகொட | 213.28 |
| 21 | MF1329 | முலட்டியன | 212.65 |
| 22 | MF1498 | ஊருபொக்க | 211.48 |
| 23 | MF0802 | தெனியாய | 211.46 |
| 24 | MF1500 | கிரீன் ஹவுஸ் | 211.36 |
| 25 | MF1287 | நந்தன | 211.26 |
| 26 | MF1462 | லயன்ஸ் | 211.10 |
| 27 | MF0454 | கலகாவ | 210.35 |
| 28 | BF0161 | ∴பேரிலன்ட் | 210.12 |
| 29 | MF1578 | லக்வின்கா | 209.09 |
| 30 | MF0443 | கிங்ஸ்போ | 208.97 |
| 31 | MF1231 | எட்டம்பகஹவில | 208.64 |
| 32 | MF1490 | இரன்சேகொட | 208.51 |
| 33 | MF1577 | லேனம ஹில்ஸ் | 207.91 |
| 34 | MF1506 | வலவ்வத்த | 206.57 |
| 35 | MF1433 | கொஸ்கஹதொல எல்ல | 205.11 |
| 36 | MF0426 | சவுத் கோ-ப் | 204.27 |
| 37 | MF1414 | தெரங்கல ஹில்ஸ் | 204.16 |
| 38 | MF1360 | டிசான்வெலி | 203.57 |
| 39 | MF1516 | கன்ரிச் | 203.57 |
| 40 | MF1320 | ரிச்லன்ட் | 203.28 |
| 41 | MF0414 | கட்டன்வில | 202.69 |
| 42 | MF1423 | கோ-ப் லங்கா | 202.63 |
| 43 | MF1547 | மாகந்துர | 201.84 |
| 44 | MF1077 | மஹேந்திரா | 201.78 |
| 45 | MF1539 | எஸ்.எல்.எஸ் | 200.94 |
| 46 | MF1443 | கீ டீ ஹில்ஸ் | 200.87 |
| 47 | MF0216 | இரசா | 200.23 |
| 48 | MF0977 | விலீ குரூப் | 200.08 |
| 49 | MF1417 | கோப்வீன் | 199.89 |
| 50 | MF1383 | நவ தியகல | 199.84 |
| 51 | MF1561 | தெதியகல | 199.00 |
| 52 | BF0188 | களுபோவிட்டியான | 198.94 |
| 53 | MF1464 | ∴பேரிமவுன்ட் | 198.51 |
| 54 | MF1024 | எலன் வெலி | 198.12 |
| 55 | MF1033 | நில்திய வெலி | 197.94 |
| 56 | MF1402 | நிவ் சவுத் கோ-ப் | 197.51 |
| 57 | MF1198 | தெனியாய தே சக்தி | 196.54 |
| 58 | MF1107 | திப்பொல | 196.35 |
| 59 | BF0186 | நில்வலா | 195.82 |
| 60 | MF1518 | கோ-ப் கோலா | 195.61 |
| 61 | MF1514 | நிவ் அத்துரலிய | 195.25 |
| 62 | MF1542 | அந்தரதெனிய | 194.80 |
| 63 | MF1004 | தித்தெனிபொத்த | 193.83 |
| 64 | MF1339 | யாழ்டா | 192.90 |
| 65 | BF0044 | மொரவக்கோரலே | 192.14 |
| 66 | MF0009 | எனசல்வத்தை | 191.69 |
| 67 | MF1340 | த்ரி டைம்ஸ் | 191.38 |
| 68 | MF0064 | அனின்கந்த | 189.78 |
| 69 | MF1278 | மத்தொட்ட | 187.23 |
| 70 | MF1545 | லியோன்ட்டா | 186.22 |
| 71 | MF1406 | கிரின் லங்கா | 185.30 |
| 72 | MF1484 | குடாபான | 184.55 |
| 73 | MF1533 | தலபலாகந்த | 183.61 |
| 74 | MF0016 | பெவேர்லே | 179.14 |
| 75 | MF0975 | செமிடெல் | 175.02 |
| 76 | BF0024 | நிவ் கிரிமெட்டிதெனிய | 174.64 |
| 77 | MF1362 | நிவ் காமிணி | 169.99 |
| 78 | MF1574 | பலகல | 168.35 |
| 79 | MF1482 | தொங்கல | 150.69 |
| நுவரெலியா மாவட்டம் | | | |
| 1 | MF0226 | க்லேன்லொச் | 236.59 |
| 2 | MF0779 | சமர்செட் | 236.34 |
| 3 | MF0489 | கிரேட் வெஸ்டர்ன் | 230.68 |
| 4 | MF0004 | மட்டகெலே | 229.86 |
| 5 | MF0071 | வத்தேகொட | 225.10 |
| 6 | MF0348 | நோர்வூட் | 221.32 |
| 7 | MF1301 | நுவரெலியா | 221.20 |
| 8 | MF0767 | டிலரி | 219.87 |
| 9 | MF0772 | ஹோலிரூட் | 218.84 |
| 10 | MF0545 | அகரகந்த | 218.83 |
2. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் மூலம் விலைக்கோரல்கள் மேற்கொள்ளப்படும். 04/2016(iv)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் (வெட் மற்றும் ஏனைய வரிகள் இன்றி) மொத்தப் பெறுகையின் பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்குக் குறைவாக இருப்பதனால் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும் மற்றும் 50 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட பெறுகைக்கு 03/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் CIDA பதிவுத் தர முன்னுரிமை பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வெற்றிகரமான விலைகூறுநர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்கப்பட்டவர்களாக இருத்தல் ஆகாது என்பதுடன் விலைமனு ஆவணத்தின் பிரகாரம் பின்வரும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொ. இல. | ஒப்பந்தத்தின் இலக்கம் | வேலையின் பெயர் | நேரடி மதிப்பீட்டுக் கிரயம் (மில்லியன்) | 03ஆம் இலக்க பொது ஒப்பந்தத் தேவைப்பாடு | CIDA பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | விலைமனுப் பிணை / விலைமனுப் பிணையின் செல்லுபடியாகும் காலம் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொலைபேசி இலக்கம் |
| **மின்சார வேலைகள்** | | | | | | | | |
| 1 | WP/PU/ CON/23/166 | மீரிகம ஆதார வைத்தியசாலையிலுள்ள மின்சார முறைமையை தரவேற்றம் செய்தல் | 2,491,151.00 | இல்லை | EM4 அல்லது அதற்கு மேல் | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 30,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மினுவாங்கொட.<br>வலயக் கல்வி அலுவலகம், மினுவாங்கொட.<br>தொலைபேசி இல. 0112-296418 |
| 2 | WP/PU/ CON/23/167 | மீரிகம - செத் செவன அரசாங்க முதியோர் இல்லத்தின் மின்சார முறைமை திருத்தவேலைகள் | 9,493,319.00 | ஆம் | EM4 அல்லது அதற்கு மேல் | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 60,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 120,000.00 | |
| 3 | WP/PU/ CON/23/168 | திவுலப்பிட்டிய மாவட்ட வைத்தியசாலையிலுள்ள மின்சார முறைமையை தரவேற்றம் செய்தல் | 2,487,072.40 | இல்லை | EM4 அல்லது அதற்கு மேல் | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 30,000.00 | |
| 4 | WP/PU/ CON/23/169 | ஜா-எல மாவட்ட வைத்தியசாலையிலுள்ள மின்சார முறைமையை தரவேற்றம் செய்தல் | 5,926,713.50 | ஆம் | EM4 அல்லது அதற்கு மேல் | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 35,900.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 71,800.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், வத்தளை, இல. B/25/1, மகுள்பொக்குண வீதி, ராகம.<br>தொலைபேசி இல. 0112952126 |
| **நிர்மாண வேலைகள்** | | | | | | | | |
| 5 | WP/PU/ CON/23/170 | தேவாலபொல ஆரம்ப மருத்துவ பராமரிப்பு பிரிவில் ETU மற்றும் OPD கட்டிடத்தை நிர்மாணித்தல் | 12,437,028.56 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 4,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 75,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 150,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், மினுவாங்கொட.<br>வலயக் கல்வி அலுவலகம், மினுவாங்கொட.<br>தொலைபேசி இல. 0112-296418 |
| 6 | WP/PU/ CON/23/171 | மினுவாங்கொட ஆதார வைத்தியசாலையில் ETU மேம்படுத்தல்களை பூர்த்தி செய்தல் | 4,233,737.95 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 25,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 50,000.00 | |
| 7 | WP/PU/ CON/23/172 | மினுவாங்கொட மாவட்ட வைத்தியசாலையிலுள்ள பற் சிகிச்சையகம் மற்றும் தாழ்வாரத்தின் பகுதிபிரிப்பு மற்றும் புதுப்பித்தல் வேலைகள் | 2,200,404.38 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 30,000.00 | |
| 8 | WP/PU/ CON/23/173 | போகலாகம மாவட்ட வைத்தியசாலையின் கூரை, சீலிங், மின்சாரம் மற்றும் ஏனைய திருத்தவேலைகள் | 6,599,739.65 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 40,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 80,000.00 | |
| 9 | WP/PU/ CON/23/174 | மீரிகம ஹல்பே ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவின் கூரை, மலசலகூடம், கிணறு மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவின் புதுப்பித்தல் வேலைகள் | 2,907,262.59 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 17,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 35,000.00 | |
| 10 | WP/PU/ CON/23/175 | மலதெனிய ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவின் கட்டிடம் மற்றும் மலசலகூட திருத்தவேலைகள் | 2,896,398.09 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 17,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 35,000.00 | |
| 11 | WP/PU/ CON/23/176 | மீரிகம செத்செவன அரசாங்க முதியோர் இல்லத்தின் கஜபா பிரிவின் மிகுதி வேலைகளைப் பூர்த்தி செய்தல் | 3,456,735.39 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 21,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 43,000.00 | |
| 12 | WP/PU/ CON/23/177 | மீரிகம செத்செவன விசேட ஆண் பிள்ளைகள் புனருத்தாரண நிலையத்தின் கலி முறைமை | 5,122,155.60 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 2,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 33,600.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 67,200.00 | |
| 13 | WP/PU/ CON/23/178 | மேமா/மினு/கந்தன்கமுவ மகா வித்தியாலயம் - மலசலகூடத் தொகுதியை நிர்மாணித்தல் | 2,420,299.59 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 14,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 29,000.00 | |
| 14 | WP/PU/ CON/23/179 | மினுவங்கொட பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தின் நுழைவாயில் கெனபியை நிர்மாணித்தல் | 880,707.00 | இல்லை | C9 மற்றும் C8 | 500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 5,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 11,000.00 | |
| 15 | WP/PU/ CON/23/180 | பெம்முல்ல ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவின் மிகுதி வேலைகள் | 28,788,154.62 | ஆம் | C6, C5 மற்றும் C4 | 9,000.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 350,000.00 | வழங்குதல் - பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா. தொலைபேசி இல. 033-2222515<br>சமர்ப்பித்தல் - பெறுகை பிரிவு, பொறியியல் பணியகம் (மே.மா), 5ஆம் தளம், இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொ.பே. 011-2092504 |
| 16 | WP/PU/ CON/23/181 | மேமா/கம்/மாபிம வித்யாகார மகா வித்தியாலயம் - of 90'×25' மூன்று மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் - படிநிலை III | 16,118,148.00 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 6,000.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 200,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம் கம்பஹா, நீதிமன்ற வீதி, கம்பஹா.<br>தொலைபேசி இல. 033-2222515 |
| 17 | WP/PU/ CON/23/182 | பெம்முல்ல ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவிலுள்ள உத்தியோகபூர்வ விடுதிகளின் புதுப்பித்தல் வேலைகள் | 2,022,998.95 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 25,000.00 | |
| 18 | WP/PU/ CON/23/183 | மொரன்ன மனிதவள அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பயிற்சி நிலையத்திலுள்ள விடுதியின் புதுப்பித்தல் வேலைகள் | 19,048,357.85 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 6,000.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 240,000.00 | |
| 19 | WP/PU/ CON/23/184 | கனேமுல்ல ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவில் தற்போதுள்ள கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் (பகுதிபிரித்தல் வேலைகள் போன்றன) | 6,883,522.05 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 42,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 85,000.00 | |
| 20 | WP/PU/ CON/23/185 | மேமா/கம்/இம்புல்கொட சுனேத்ராதேவி ஆரம்ப வித்தியாலயம் - நீர்த் தாங்கியொன்றை நிர்மாணித்தல் | 2,043,490.08 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 12,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 25,000.00 | |
| 21 | WP/PU/ CON/23/186 | ரந்தாவன மாவட்ட வைத்தியசாலையின் புதுப்பித்தல் வேலைகள் (வார்ட் புதுப்பித்தல்கள், கூரை, மலசலகூட புதுப்பித்தல்கள் மற்றும் ஏனைய புதுப்பித்தல்கள்) | 3,320,353.40 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 21,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 42,000.00 | |
| 22 | WP/PU/ CON/23/187 | ரந்தாவன மாவட்ட வைத்தியசாலையின் விடுதிகளின் (MO) அத்தியாவசிய புதுப்பித்தல் வேலைகள் | 6,844,459.41 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 42,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 85,000.00 | |
| 23 | WP/PU/ CON/23/188 | கம்பஹாவிலுள்ள RDHS அலுவலக விஸ்தரிப்பின் மிகுதி வேலைகள் | 21,233,674.55 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 6,500.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 250,000.00 | |
| 24 | WP/PU/ CON/23/189 | ராகம RMSD யிலுள்ள களஞ்சியசாலை இடப்பரப்பின் புதுப்பித்தல் வேலைகள் | 4,071,247.40 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 25,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 50,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், வத்தளை, இல. B/25/1, மகுள்பொக்குண வீதி, ராகம.<br>தொலைபேசி இல. 0112952126 |
| 25 | WP/PU/ CON/23/190 | மல்வத்துஹிரிபிட்டிய மாவட்ட வைத்தியசாலையின் வேலி மற்றும் எல்லைச் சுவரின் புதுப்பித்தல் வேலைகள் | 2,519,459.65 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 30,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பியகம, உடுபில வீதி, மாகொல, பியகம.<br>தொலைபேசி: 0112-963524 |
| 26 | WP/PU/ CON/23/191 | மேமா/கள/சுபாஷி ராஜகீய மகா வித்தியாலயம் - 90'×25' மூன்று மாடிக் கட்டிடத்தை பூர்த்தியாக்கல் வேலைகள் | 4,678,745.40 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 29,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 58,000.00 | |
| 27 | WP/PU/ CON/23/192 | மேமா/கள/வெலேகொட முஸ்லிம் வித்தியாலயம் - 90'×25' மூன்று மாடிக் கட்டிடத்தின் தரைத் தளம் மற்றும் 1ஆம் தளத்தை பூர்த்தி செய்தல் | 15,980,161.01 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 5,500.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 198,500.00 | |
| 28 | WP/PU/ CON/23/193 | மல்வத்துஹிரிபிட்டிய மாவட்ட வைத்தியசாலையிலுள்ள வார்ட், மலசலகூடம் மற்றும் ஏனைய புதுப்பித்தல் வேலைகள் | 2,941,556.00 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 17,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 35,000.00 | |
| 29 | WP/PU/ CON/23/194 | பியகம DEO வில் நீர்த் தாங்கியின் நிர்மாணம் மற்றும் திருத்தவேலைகள் | 3,022,278.90 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 18,250.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 36,500.00 | |
| 30 | WP/PU/ CON/23/195 | கிரிபத்கொட ஆதார வைத்தியசாலையிலுள்ள மலசலகூடத் தொகுதியின் புதுப்பித்தல் வேலைகள் | 3,093,900.11 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 18,875.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 37,750.00 | |
| 31 | WP/PU/ CON/23/196 | பியகம சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் மிகுதி வேலைகள் மற்றும் ஏனைய வேலைகள் - படிநிலை III | 6,969,322.73 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 42,750.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 85,500.00 | |
| 32 | WP/PU/ CON/23/197 | கிரிபத்கொட ஆதார வைத்தியசாலைக்கான உத்தேச இரண்டு மாடி மினி தியேட்டர் கட்டிடம். | 104,878,190.20 | ஆம் | C4 மற்றும் C3 | 20,000.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 1,700,000.00 | வழங்குதல் - பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பியகம, உடுபில வீதி, மாகொல, பியகம. தொலைபேசி: 0112-963524<br>சமர்ப்பித்தல் - பெறுகை பிரிவு, பொறியியல் பணியகம் (மே.மா), 5ஆம் தளம், இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொ.பே. 011-2092504 |
| 33 | WP/PU/ CON/23/198 | ஆண்டியம்பலம ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவின் கூரை, வேலி மற்றும் ஏனைய புதுப்பித்தல் வேலைகள் | 1,976,730.50 | இல்லை | C9 மற்றும் C8 | 1,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 10,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 20,000.00 | நீர்கொழும்பு பிரதேச பொறியியலாளர் அலுவலகம், இல. 75, லூவிஸ் பிளேஸ், நீர்கொழும்பு,<br>தொலைபேசி-: 0312-222357 |
| 34 | WP/PU/ CON/23/199 | மேமா/ஜய/மாலபே ராகுல மகளிர் வித்தியாலயம் - மூன்று மாடிக் கட்டிடத்தின் மிகுதி நிர்மாண வேலைகள் (ஆய்வுகூடம் சகிதம் முதலாம் மாடியின் பூர்த்தியாக்கல் வேலைகள்) - படிநிலை ii | 24,851,380.45 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 8,000.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 300,000.00 | வழங்குதல் - பிரதேச பொறியியலாளர், பிரதேச பொறியியலாளர் அலுவலகம், பத்தரமுல்ல, தெபானம, பன்னிபிட்டிய. தொலைபேசி இல. 011-2844354<br>சமர்ப்பித்தல் - பெறுகை பிரிவு, பொறியியல் பணியகம் (மே.மா), 5ஆம் தளம், இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல. தொ.பே. 011-2092504 |
| 35 | WP/PU/ CON/23/200 | மேமா/ஜய/சுனேத்ராதேவி மகளிர் வித்தியாலயம், நுகேகொட - 90 x 30 நான்கு மாடி புதிய கட்டிடத்தின் மிகுதி வேலைகள் (முதலாம் தளத்தைப் பூர்த்தி செய்தல்) | 22,350,000.00 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 8,000.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 280,000.00 | |
| 36 | WP/PU/ CON/23/201 | மஹரகம பிரதேக கல்வி அலுவலகம், பத்தரமுல்ல பொறியியல் அலுவலகம் மற்றும் பன்னிபிட்டிய, தெபானம, தர்மபால வித்தியால கேட்போர் கூடத்தின் மிகுதி வேலைகள் - படிநிலை III (இரண்டாம் தளத்தை நிர்மாணித்தல்) | 46,914,675.70 | ஆம் | C6, C5 மற்றும் C4 | 12,500.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 600,000.00 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 37 | WP/PU/ CON/23/202 | அத்துருகிரிய மாவட்ட வைத்தியசாலையின் அத்தியாவசிய புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைகள் (வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்துதல், இற்கு சிகிச்சையக அறையை பகுதிபிரித்தல், முதியோர் பராமரிப்பு பிரிவாக பயன்படுத்தும் பழைய கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள், DMO விடுதியின் புதுப்பித்தல் வேலைகள், ஏனைய சிறிய திருத்தவேலைகள்) | 9,245,009.86 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 4,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 56,750.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 113,500.00 | பிரதேச பொறியியலாளர்,<br>பிரதேச பொறியியலாளர் அலுவலகம்,<br>பத்தரமுல்ல, தெபானம, பன்னிபிட்டிய.<br>தொலைபேசி இல. 011-2844354 |
| 38 | WP/PU/ CON/23/203 | கொழும்பு RMSD யில் கரையான் கட்டுப்பாட்டு பீடை ஒழிப்பை பிரயோகித்தல், கட்டிடங்களுக்கு நிறப்பூச்சு பூசுதல், தற்போதுள்ள மலசலகூடங்களின் புதுப்பித்தல் வேலைகள், சீலிங் புதுப்பித்தல் வேலைகள், இரும்பு வேலைகள், ஏனைய சிறிய திருத்தவேலைகள் மற்றும் ரீவயரிங் வேலைகள் | 11,788,494.15 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 4,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 72,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 145,000.00 | |
| 39 | WP/PU/ CON/23/204 | தலங்கம மாவட்ட வைத்தியசாலையின் அத்தியாவசிய புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல் வேலைகள் (மலசலகூடத் திருத்தவேலைகள் சகிதம் வடிகாலமைப்பு முறைமையை மேம்படுத்துதல், பகுதிபிரிப்பு OPD மற்றும் ஏனைய சிறிய திருத்தவேலைகள்) | 12,959,841.15 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 4,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 80,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 160,000.00 | |
| 40 | WP/PU/ CON/23/206 | நுகேகொட - மேமா/ஜய/சமுத்ராதேவி மகளிர் வித்தியாலயத்திலுள்ள இரண்டு மாடி L வடிவான பிரதான மண்டபக் கட்டிடத்தின் (80’×25’,60’×40’) கூரை திருத்தவேலைகள் | 3,162,482.50 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 19,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 39,000.00 | |
| 41 | WP/PU/ CON/23/207 | மேமா/ஜய/ஹேவாவிதாரண மகா வித்தியாலயம் - தற்போதுள்ள 90’×25' மூன்று மாடிக் கட்டிடத்தை தகர்த்தல் | 3,098,629.93 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 15,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 31,000.00 | |
| 42 | WP/PU/ CON/23/208 | ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் தடுப்புச் சுவரை நிர்மாணித்தல் | 14,035,160.20 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 5,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 90,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 180,000.00 | பிரதேச பொறியியலாளர்,<br>பிரதேச பொறியியலாளர் அலுவலகம், ஹோமாகம,<br>நீதிமன்ற வீதி, ஹோமாகம.<br>தொலைபேசி 0112-855719 |
| 43 | WP/PU/ CON/23/209 | அவிசாவளை மாவட்ட வைத்தியசாலையிலுள்ள தியேட்டரின் புதுப்பித்தல் வேலைகள் | 3,197,129.52 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 19,250.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 38,500.00 | |
| 44 | WP/PU/ CON/23/210 | அழகியற்கலை ரிசோர்ட்டிலுள்ள (மேமா) கட்டிடத்தின் நிறப்பூச்சு வேலைகள்<br>அழகியற்கலை ரிசோர்ட்டிலுள்ள (மேமா) மூன்று மாடிக் கட்டிடத்தின் ஜன்னல் திருத்தவேலைகள் | 3,997,389.86 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 24,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 49,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம்,<br>இல. 151/4/2/1, மாளிகாவத்த பிளேஸ்,<br>மாளிகாவத்தை, கொழும்பு-10.<br>தொலைபேசி-: 011-2447773 |
| 45 | WP/PU/ CON/23/211 | மேமா/கொழு/ரத்னாவளி மகளிர் வித்தியாலயம் - நீர் வசதிகளை வழங்குதல் | 2,700,000.00 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 16,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 32,000.00 | |
| 46 | WP/PU/ CON/23/212 | கிறீன் பாத்தில் தற்போதுள்ள இரண்டு மாடிக் கட்டிடத்தை ஆசிரியர் அபிவிருத்தி நிலையமாக மாற்றும் மிகுதி வேலைகள் | 4,999,791.35 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 2,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 30,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 60,000.00 | |
| 47 | WP/PU/ CON/23/213 | பிலியந்தலை மாவட்ட வைத்தியசாலை OPD கட்டிடத்தின் புதுப்பித்தல் வேலைகள் | 8,223,793.24 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 50,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 100,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம்<br>இரத்மலானை,<br>இல. 25, மாளிகாவ வீதி, இரத்மலானை.<br>தொலைபேசி இல. 0112-622517 |
| 48 | WP/PU/ CON/23/214 | மெத் செவன ஓய்வு அறையின் திருத்தவேலைகள் | 2,447,267.85 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 20,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 40,000.00 | |
| 49 | WP/PU/ CON/23/215 | இரத்மலானை பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தின் திருத்தவேலைகள் மற்றும் மேம்படுத்தல் வேலைகள் | 7,117,514.72 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 42,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 84,000.00 | |
| 50 | WP/PU/ CON/23/216 | ஹொரண - பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தின் கூரை மற்றும் ஏனைய திருத்தவேலைகள் | 2,911,894.50 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 17,500.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 35,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம்,<br>ஹொரணை, பல்லபிட்டிய, ஹொரண.<br>தொலைபேசி: 034-2261019 |
| 51 | WP/PU/ CON/23/217 | வல்கம சத்தாதிஸ்ஸ வித்தியாலயத்தில் ஆண்களுக்கான இரண்டு மலசலகூடங்கள் மற்றும் பெண்களுக்கான இரண்டு மலசலகூடங்களை நிர்மாணித்தல் | 2,500,728.88 | இல்லை | C9, C8 மற்றும் C7 | 1,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 15,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 30,000.00 | பிரதேச பொறியியலாளர் அலுவலகம்,<br>ஸ்ரீ மகா விஹார வீதி, பாணந்துறை.<br>T.P -: 038-2234774 |
| 52 | WP/PU/ CON/23/218 | உடுவர கனிஷ்ட வித்தியாலயம், மில்லனிய - 40’×48’ கட்டிடத்திற்கான கூரையை நிர்மாணித்தல் (படிநிலை II) | 10,048,428.05 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 4,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 60,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 120,000.00 | |
| 53 | WP/PU/ CON/23/219 | கல்பாத்த மாவட்ட வைத்தியசாலையிலுள்ள வைத்தியசாலை சமையலறை மற்றும் சீலிங் திருத்தவேலைகள் | 7,997,804.38 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,500.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 50,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 100,000.00 | |
| 54 | WP/PU/ CON/23/220 | உபாதய க. வி. - 90’×25' மூன்று மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் (படிநிலை III) | 6,761,882.65 | ஆம் | C8, C7 மற்றும் C6 | 3,000.00 | ரொக்கப் பண வைப்பு - ரூபா 40,000.00<br>விலைமனுப் பிணை முறி - ரூபா 80,000.00 | |
| 55 | WP/PU/ CON/23/221 | பரகஸ்தொட்ட வித்யாலோக்க மகா வித்தியாலயத்திலுள்ள 120’x30' மூன்று மாடிக் கட்டிடத்தின் மிகுதி வேலைகள் (படிநிலை 2) | 18,406,490.60 | ஆம் | C7, C6 மற்றும் C5 | 6,000.00 | விலைமனுப் பிணை முறி - ரூபா 220,000.00 | |

04. இதில் ஆர்வம் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இயைபுடைய பிரதேச பொறியியல் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் அலுவலக நேரத்தினுள் இதே அலுவலகத்தில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. மீளளிக்கப்படாத கட்டணத்தை (அட்டவணையின் 07ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) 2023-04-10ஆம் திகதி முதல் 2023-05-02ஆம் திகதி வரையுமான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 03.00 மணிக்கிடையில் மேல் மாகாணம் - மாகாண சபைக்குச் செலுத்தியதன் பின் இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அவர்களுக்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) எழுத்து மூல விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் எந்தவொரு வளமுள்ள விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

06. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட நகல் பிரதிகளுடனான விலைமனுக்களை வெவ்வேறான கடித உறைகளில் இட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு இரு நகல்களில் தயாரிக்கப்பட்ட விலைமனுக்களை இயைபுடைய பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு (அட்டவணையின் 09ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்) 2023-05-03ஆம் திகதி மு.ப. 10.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனடுத்து அவ்வேளையிலேயே விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணை முறி அல்லது ரொக்கப் பண வைப்பு பற்றுச்சீட்டு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். (அட்டவணையின் 07ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்). செல்லுபடிக் காலமானது விலைமனு ஆவணத்தின் பிரகாரமாகவிருத்தல் வேண்டும்.

08. விலைமனுதாரர்கள் 1987இன் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும். (அட்டவணையின் 05ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம்)

**பெறுகைப் பிரிவு,**
**பொறியியல் பணியகம் (மே.மா),**
**5ஆம் மாடி, 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**
**2023-06-04**
**தொலைபேசி : 0112-092504**
**தொலைநகல் : 0112-092505**

# ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

## பொது அறிவித்தல்

### வீதிகளுக்கு பெயரிடுவதற்கான அறிவிப்பு

1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வீதியின் பெயரிடல் மற்றும் நினைவுச்சின்னம் நிர்மாணச் சட்டத்தின் பிரிவு 71(1) இன் படி மற்றும் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்க, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயின் அதிகாரபூர்வ எல்லைக்குள் உள்ள வீதிகள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பெயரிடுவதற்காக மேல் மாகாணத்தில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள அமைச்சரின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**தொடர்ந்து அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வீதிகள் முன்மொழியப்பட்ட பெயரிலேயே அழைக்கப்படும் என்பதை இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.**

| தொடர் இல | வீதியின் தற்போதைய பெயர் | முன்மொழியப்பட்ட பெயர் |
|---|---|---|
| 01. | இராஜகிரிய பிரதேச தலைமைச் செயலக அலுவலகம், தபால் நிலையம், அரச மொழி திணைக்களம், பல பொது நிறுவனங்கள் அமைந்துள்ள வெலிக்கடை பழைய கோட்டே வீதியிலிருந்து சரண மாவத்தை வரையான வரிப்பணம் இலக்கம் 341/1, 341/2, 341/3 ,341/4 ,341/5 ,341/5 1/1 இலிருந்து 341/5 4/1, வரையில் 341/6 ,341/12 ,341/16, 341/20 ,341/20A ,341/21 ,341/21 2/1 மற்றும் 341/22 வரையான குறுக்கு வீதிகள் | “செவனி பெரகும்பா இரஜ மாவத்தை” |
| 02. | நுகேகொட ஸ்டேன்லி திலக்கரத்ன மாவத்தையில் கல்வலவத்த வரிப்பணம் இலக்கம் 166 ,166A, 166B, 166/1, 166/2 ,166/3, 166/4 ,166/4A, 166/4C,166/8A1, 166/9 ,166/4C 1/1, 166/9 1/1 ,166/10 இலிருந்து 166/26A வரையில் 166/29 இலிருந்து 166/32 வரை மற்றும் 166/35 வரையான குறுக்கு வீதிகள் | “அருணழு பிரதேசம்” |
| 03. | வெலிகட பழைய கொட்டாவ வீதி தொடக்கத்தில் தற்போது தர்மபால பிரதேசத்தில் வரிப்பணம் இலக்கம் 01 ,01 1/1, 3, 11, 11 1/1, 13, 13A 15 ,17, 17 1/1 ,17 1/2 ,17/1, 17 2/1 ,17/1 1/1, 27, 29,31, 41, 45 ,47, 47A ,53 ,53/10 ,53/11 தொடக்கம் 53/15, வரையில் 53/17, 53/19 ,53/20, 53/21 53/24 இலிருந்து 53/31 வரையிலும் 53/3, 53/3 1/1, 53/34, 53/38, 53/38A ,53/4 53/4 1/1, 55, 55A, 55B ,59 ,59 1/1, 61, 65 ,73, 73/1, 73/1A ,75, 77 ,79 ,83 ,85 ,85/1 ,85/2 ,87, 55B ,2 ,21/1 ,2 2/1, 06, 20,20 1/1, 22, 24 ,24/1, 24/2, 30, 34 இலிருந்து 34/7, வரையில் 38 ,40 இலிருந்து 40/5 வரை 42, 44 to 44/3 இலிருந்து 52 ,52A 54 மற்றும் 56 வரையான குறுக்கு வீதிகள் | “ஸ்ரீமத் அநாகரிக்க தர்மபால மாவத்தை” |
| 04. | பண்டாரநாயக்கபுர ஹீன் எல அருகில் வீதி வரிப்பணம் இலக்கம் 2, 2A, 4,4/1 ,12/11 ,12/13 ,12/13 1/1 ,12/14 ,12/5 6B வரையான குறுக்கு வீதிகள் | “ரெவ். வேகட சிரினிவாச நாஹிமி மாவத்தை” |
| 05. | இராஜகிரிய வெலிகட ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை 5 ஆம் ஒழுங்கை இலக்கம் 425/7A , அமைந்துள்ள 425 to 425/7 A 1/1 இலிருந்து 431 வரையான வீதி | “ஆட்டிகல பூங்கா” |

**2023.04.10**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை,**
**மாநகர சபை அலுவலகம்.**

**ஆர், ஏ, ஷாலிக்கா எஸ். இரணவீர,**
**நகராட்சித் தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர,**
**கோட்டே மாநகர சபை.**

# இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

### இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் தொழிநுட்ப பிரிவில் ∴பயர்வால் (FIREWALL) உரிமங்களை புதுப்பித்தல்

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் கொள்முதல் குழுத்தலைவரினால் (மேஜர்) தொழிநுட்ப பிரிவிற்கான ∴பயர்வால் (FIREWALL) உரிமங்களை புதுப்பித்தல் சேவையினை வழங்குவதற்கு தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மனு ஆவணங்களை TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.5,000.00** கட்டணத்தினை செலுத்தி **2023.05.02** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.

ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி மனுக்களை சரியான முறையில் பூரணப்படுத்தி பிரதியை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2023.05.03 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், சிரேஷ்ட கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 08** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“TRCSL தொழிநுட்ப பிரிவிற்கு ∴பயர்வால் (FIREWALL) பராமரிப்பு ஒப்பந்தம் மற்றும் உரிமங்களை புதுப்பித்தல்”** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கொள்முதல் குழு, (மேஜர்),**
**இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு,**
**276, எல்விட்டிகல மாவத்தை,**
**கொழும்பு 08.**

# டெஸ்ட் தலைமைப் பதவியிலிருந்து விலகும் முடிவை திமுத் கருணாரத்ன மீள் பரிசீலனை

இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழுவினரின் கோரிக்கையை அடுத்து பதவி விலகும் தனது முடிவை மீ ள் பரிசீலனை செய்ய இலங்கை டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன இணங்கியுள்ளார்.

நியூசிலாந்தில் அண்மையில் நடைபெற்ற இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் முழுமையாகத் தோல்வி அடைந்ததை அடுத்தே அயர்லாந்துக்கு எதிராக இலங்கையில் நடைபெறவிருக்கும் இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை அடுத்து பதவி விலகுவது குறித்து கருணாரத்ன அறிவித்திருந்தார்.

நான்கு ஆண்டுகள் டெஸ்ட் அணித் தலைவராக செயற்பட்ட கருணாரத்ன, எதிர்வரும் புதிய உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்திற்கு புதிய தலைவர் ஒருவருக்கு பதவியை விட்டுக்கொடுக்கவே அவர் முன்வந்தார். டெஸ்ட் அணியின் உப தலைவர் தனஞ்சய டி சில்வாவின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

எனினும் தற்போது நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. அவரது இராஜினாமாவை தேர்வுக் குழுவினர் ஏற்காத நிலையில் அந்த முடிவை மீளாய்வு செய்யும்படி கோரியுள்ளனர்.

'அதனை நான் செய்வதாக நான் அவர்களுக்கு கூறினேன்' என்று வரும் ஏப்ரல் 21ஆம் திகதி தனது



35ஆவது பிறந்த நாளைக் கொண்டாடவிருக்கும் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

'என்றாலும் அது எவ்வாறு செயற்படும் என்பது பற்றி நான் அவர்களுடன் பேச வேண்டி உள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளுக்காக முழு பருவத்திற்கும் நான் செயற்பட விரும்புகிறார்களா அல்லது இந்த ஆண்டு முடியும் வரை இருந்து விட்டு அந்தப் பொறுப்பை கையளிக்க விரும்புகிறார்களா என்று தெரிய வேண்டும். அயர்லாந்து தொடரின் போதும் இதுபற்றி தேர்வாளர்களுடன் நான் மேலும் பேசுவேன்' என்றும் கருணாரத்ன ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசிய அணி குழப்பமான சூழலை சந்தித்திருந்தபோதே 2019 ஆம் ஆண்டு டெஸ்ட் அணித் தலைமைப் பொறுப்பு கருணாரத்னவுக்கு வழங்கப்பட்டது. அவரால் அணியில் ஸ்திரத்தன்மையை கொண்டுவர முடிந்தது. அவர் தனது முதலாவது சுற்றுப்பயணத்திலேயே தென்னாபிரிக்காவை அதன் சொந்த மண்ணில் 2–0 என வைட்வொஷ் செய்தார். துணைக்கண்ட நாடு ஒன்று இந்த சாதனையைப் படைத்த முதல் சந்தர்ப்பமாக அது இருந்தது.

அணியை முன்னிலைப்படுத்திய அவர் தனது துடுப்பாட்டத்தையும் மேம்படுத்திக்கொண்டார். அணித்தலைவராக 26 டெஸ்ட் போட்டிகளில் 2242 ஓட்டங்களைப் பெற்ற அவரது ஓட்ட சராசரி 47.70 ஆக இருந்தது. அவர் பெற்ற 14 டெஸ்ட் சதங்களில் ஆறு அணித்தலைவராக பெற்றவையாகும்.

புதிய அணித்தலைவர் ஒருவருக்கு வழி விடும் வகையிலேயே அவரது முடிவு இருந்தது.

'முன்னர் நான் கூறியதுபோல், புதிய டெஸ்ட் பருவத்தில் நான் பாதி காலத்தில் செயற்படுவதை விட முழு பருவத்திற்கும் புதிய அணித் தலைவர் ஒருவருக்கு கையளித்தால் சிறந்தது என்று நான் நினைத்தேன். அடுத்த தொடருக்குப் பின்னர் தலைமைப் பொறுப்பை கையளிப்பதற்கே நான் முன்னுரிமை அளித்தேன். ஆனால், தேர்வாளர்கள் கோரிக்கை ஒன்றை விடுத்திருக்கிறார்கள், நான் அதனை பரிசீலனை செய்யவுள்ளேன்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடர் வரும் ஏப்ரல் 16ஆம் திகதி காலியில் ஆரம்பமாகவுள்ளது.

## பாரதி இல்லம் வெற்றி



மட்டக்களப்பு, களுதாவளை மகாவித்தியாலயம் இல்ல விளையாட்டுப் போட்டியில் பாரதி இல்லம் 493 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை வென்றது.

வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் கடந்த சனிக்கிழமை (08) அதிபர் கே. சத்தியமோகன் தலைமையில் நடைபெற்ற இந்த விளையாட்டுப் போட்டிக்கு இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே. மகேசன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். மூன்று இல்லங்கள் பங்கேற்ற விளையாட்டுப் போட்டியில் நாவலர் இல்லம் 448 புள்ளிகளைப் பெற்றுஇரண்டாம் இடத்தையும், விபுலானந்தர் இல்லம் 414 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் பெற்றன.



பெலவத்த பி.எச். புத்ததாச மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற 11ஆவது மெர்க்மரைன் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் சம்பியன் கிண்ணம் வென்ற கமர்ஷியல் கிரடிட் அன்ட் பினான்ஸ் அணியை படத்தில் காணலாம்.

(படம்: ருஸைக் பாரூக்)

## சர்வதேச செய்திகள்

# சிரிய இலக்குகளின் மீது இஸ்ரேல் கடும் தாக்குதல்

சிரிய கட்டுப்பாட்டு பகுதியில் இருந்து இஸ்ரேல் மீது பல ரொக்கெட் குண்டு தாக்குதல்கள் நடத்தப்பட்டதை அடுத்து சிரியாவின் பல இராணுவ இலக்குகள் மீது இஸ்ரேல் நேற்று தாக்குதல் நடத்தியுள்ளது.

கோலன் குன்றில் சிரியாவில் இருந்து ஆறு ரொக்கெட் குண்டுகள் வீசப்பட்டதை அடுத்து சிரிய இராணுவ வளாகம் மற்றும் ரொக்கெட் ஏவு கருவிகள் மீது பீரங்கிகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலிய இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

இதில் மூன்று ரொக்கெட் குண்டுகள் இஸ்ரேலிய பகுதிக்குள் நுழைந்ததோடு ஒன்று இடைமறிக்கப்பட்ட



நிலையில் இரண்டு திறந்த வெளிப் பகுதியில் விழுந்ததாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

சிரிய பாதுகாப்பு அமைச்சு பேஸ்புக்கில் இந்தத் தாக்குதலை உறுதி செய்துள்ளது.

இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு வான் பாதுகாப்பு அமைப்பு பதிலளித்ததாகவும் சில ஏவுகணைகள் வெற்றிகரமாக இடைமறிக்கப்பட்டதாகவும் சிரிய பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்றும் பொருட்சேதம் மாத்திரமே ஏற்பட்டதாகவும் அந்த அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில் ஈரான் ஆதரவு பலஸ்தீன இஸ்லாமி ஜிஹாத் அமைப்பின் ஆயுதப் பிரிவான அல் குத்ஸ் படையணி இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு பொறுப்பேற்றதாக லெபனான் ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஜெரூசலம் அல் அக்ஸா பள்ளிவாசலுக்குள் இஸ்ரேலிய படை கடந்த வாரம் ஊடுருவிய சம்பவங்களைத் தொடர்ந்தே பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ளது.

## ஈரானில் ஹிஜாப் அணிவதை கண்காணிப்பதற்குக் 'கெமரா'



ஈரானில் பெண்கள் ஹிஜாப் அணிவதைக் கண்காணிக்க பொது இடத்தில் கண்காணிப்புக் கெமராக்கள் பொருத்தும் நடவடிக்கையை அந்நாட்டு நிர்வாகம் ஆரம்பித்துள்ளது.

தலையை மறைக்காத பெண்களுக்கு, அதனால் ஏற்படும் "விளைவுகள் குறித்து எச்சரிக்கும் குறுஞ்செய்திகள்" அனுப்பப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது ஹிஜாப் சட்டத்தை எதிர்ப்பதைத் தடுக்க உதவும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹிஜாப் சட்டத்தை மீறியதாகக் குற்றம்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்ட நிலையில் மாஷா அமீனி என்ற பெண் தடுப்புக்காவலில் மரணித்ததை அடுத்து கடந்த ஆண்டு ஈரானில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் வெடித்தன.

அது தொடக்கம் கணிசமான பெண்கள் தமது முக்காடை அகற்ற ஆரம்பித்துள்ளனர். குறிப்பாக கைது செய்யும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் பெரிய நகரங்களில் பெண்கள் இதனை செய்து வருகின்றனர்.

அரச செய்தி நிறுவனமான இஸ்லாமிய குடியரசு செய்தி நிறுவனம் வெளியிட்டிருக்கும் பொலிஸ் அறிக்கையில், ஸ்மார்ட் கெமராக முறை மற்றும் ஏனைய அடையாளம் காணும் முறைகள் பயன்படுத்தப்பட்டு ஹிஜாப் சட்டத்தை மீறுபவர்களுக்கு ஆவணங்கள் மற்றும் எச்சரிக்கை செய்திகள் வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

1979 இஸ்லாமிய புரட்சி தொடக்கம் பெண்கள் ஹிஜாப் கொண்டு தமது தலையை மறைப்பது சட்டரீதியாக கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு அதனை மீறுபவர்கள் மீது அபராதம் அல்லது சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது.

## ஆயுததாரிகளின் தாக்குதலில் நைஜீரியாவில் 74 பேர் கொலை

வட மத்திய நைஜீரியாவின் பெனு மாநிலத்தில் ஆயுததாரிகளால் நடத்தப்பட்ட இரு வெவ்வேறு தாக்குதல்களில் குறைந்தது 74 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அண்மைய ஆண்டுகளில் இந்தப் பிராந்தியத்தில் மக்கள் தொகை அதிகரித்து விவசாய நிலங்கள் விரிவடைந்திருக்கும் நிலையில் கால்நடை மந்தைகளுக்கான திறந்த புல்வெளிப் பகுதிகள் குறைந்துள்ளன.

இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் முகாம் ஒன்றில் இருந்து கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் 28 சடலங்கள் மீட்கப்பட்டதாக பானு மாநில பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார். தாக்குதலைத் தூண்டிய காரணி உடன் உறுதி செய்யப்படாதபோதும், துப்பாக்கிதாரிகள் வந்து கண்மூடித்தனமாக சுட ஆரம்பித்ததாக பார்த்தவர்கள் விபரித்துள்ளனர்.

இதே மாநிலத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற மற்றொரு சம்பவத்தில், இறுதிச் சடங்கு ஒன்றில் கால்நடை மேய்ப்பாளர்கள் என்று சந்தேகிக்கப்படுவோர் நடத்திய தாக்குதலில் 46 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

நைஜீரியாவின் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக இருக்கும் வடக்கு மற்றும் கிறிஸ்தவர்கள் பெரும்பான்மையாக உள்ள தெற்கிற்கு மத்தியிலேயே பெனு மாநிலம் அமைந்துள்ளது. இங்கு கால்நடை மெய்ப்பாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கு இடையில் மோதல் நீடிப்பதோடு அது இன மற்றும் சமய பிளவாக மாறியுள்ளது.

எனினும் நைஜீரியாவின் தொலைதூரப் பகுதிகளில் இடம்பெறும் பல தாக்குதல்களும் வெளியுலகுக்கு தெரியாமல் விடப்படுகின்றன. இவ்வாறான தாக்குதல்களுக்கு பாதுகாப்புப் படையினர் தாமதித்தே பதிலளிக்கின்றனர்.

கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற பிறிதொரு சம்பவத்தில் சம்பாரா மாநிலத்தில் பின்தங்கிய கிராமங்களில் பிணைத் தொகை கேட்டு குறைந்தது 80 பேர் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

## கிழக்கின் குரல்



# கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அம்பாறையில் அலுவலகம்

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியை புனரமைக்கும் நடவடிக்கைகள் சித்திரைப்புத்தாண்டுக்குப் பின்னர் இடம்பெறுமென கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.பொத்துவிலில் கடந்த வெள்ளிக்கிழமை (07) நடந்த நிகழ்வில் உரையாற்றுகையிலே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். பொத்துவில் பிரதேச சபையில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத்தாக்கல் செய்த வேட்பாளர்கள் மத்தியில் பேசிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது,



அம்பாறை மாவட்ட மக்கள் நீண்ட காலமாக எதிர்நோக்கும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவுள்ளது. இது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்திற்கும் கொண்டு வந்துள்ளேன்.

இம்மாவட்டத்திலுள்ள மீனவர் சமூகம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர். இதற்கான தீர்வுகள் விரைவில் வழங்கப்படும். என்னிடம் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளை மிக விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக அம்பாறை மாவட்டத்தில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் கிளைக் காரியாலமும் அமைக்கப்படும்.இக்காரியாலமூடாக

கட்சியையும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடற்பிரசேங்களை அண்டியுள்ள மக்கள் தங்களது முறைப்பாடுகளை இக்காரியாலயத்தில் வழங்கு முடியும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் அம்பாறை மாவட்ட கரையோர அமைப்பாளர் எஸ். அப்துல் ஜப்பார் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

## விரிவுரையாளர் மரணம்



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட விரிவுரையாளரான எம்.சி. நியாஸ் நேற்று (09) காலமானார்.

நாற்பத்தியொரு வயதுடைய இவர், ஊடகவியலாளர் அஷ்ரப் ஏ சமதின் சகலனாவார். அப்துல்லா வயது (09) மற்றும் மிசைல் வயது (05) ஆகியோரின் தந்தையாவார் இவரின் திடீர் மறைவு அப்பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கோட்டைமுனை பள்ளிவாசலில் இன நல்லிணக்க இப்தார்



(மட்டக்களப்பு விஷேட நிருபர்)

இனங்களிடையே சமாதானம், சகவாழ்வு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கில்

இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் இப்தார் நிகழ்வு மட்டக்களப்பு கோட்டைமுனை யூசுபியா ஜூம்மாப் பள்ளிவாசலில் சனிக்கிழமை (08) நடைபெற்றது.

தேசிய சமாதானப் பேரவையின் மட்டக்களப்பு மாவட்ட அமைப்பான சர்வ மத செயற்குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், மட்டக்களப்பு மங்களராமயவைச் சேர்ந்த விமலரத்தின தேரர், சிவஸ்ரீ பேரின்பக் குருக்கள், இயேசு சபைத் துறவி ஜோசப் மேரி, பள்ளிவாசல் பேஷ;இமாம் ஏ.ஆர்.எம். றியாஸ் மௌலவி மற்றும் அருட் தந்தை கெனத் ஜேர்சன் உள்ளிட்ட மதத் தலைவர்களும் பங்குபற்றினர்.

பௌத்த, இந்து, கத்தோலிக்க, கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய வணக்கஸ் தலங்கள் அமைந்துள்ளதும் இன நல்லிணக்கத்திற்கு அடையாளமாகத் திகழ்வதுமான கோட்டைமுனைப் பிரதேசத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது.

## ஆலயங்களின் விபரங்களை திரட்டும் பணிகள் ஆரம்பம்

(காரைதீவு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்டத்திலுள்ள இந்து ஆலயங்களின் விபரங்களை திரட்டும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இப்பணிகள்

இடம்பெறுகின்றன. இப்பணிகளை முன்னெடுப்பது குறித்த முக்கிய கூட்டமும் இடம்பெற்றுள்ளது. திருக்கோவில் பிரதேசசெயலாளர் தங்கையா கஜேந்திரன் தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது.பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந்த வகையில்



திருக்கோவில், ஆலையடிவேம்பு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட ஆலயங்கள், இந்து மன்றங்கள், கலைஞர்கள், அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர்கள், இந்து கலைமன்றங்களை உள்ளடக்கிவாறு இச்செயலமர்வு இடம்பெற்றது.

## காஸிம் மௌலவி நினைவாக இப்தார், துஆப் பிரார்த்தனை

(கல்முனை விஷேட நிருபர்)

மர்ஹூம் அல்ஹாஜ் யூ.எல்.எம்.காஸிம் மௌலவியின் நினைவாக கல்முனை றஹ்மத் பவுண்டேஷன் ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வும் விஷேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றது.

தஃவா இஸ்லாமிய கலாபீட சபையின் பதில் தலைவர் ஐ.எல்.ஏ.மஜீட் தலைமையில் (08) இடம்பெற்ற இந்நிகழ்வில் றஹ்மத் பவுண்டேஷன் தலைவரும் கல்முனை மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வருமான றஹ்மத் மன்சூர் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

## பாலூட்டும் தாய்மார்களுக்கு 10,000 ரூபா கொடுப்பனவு

(அக்கரைப்பற்று மத்திய நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகப்பிரிவில் தாய்பாலூட்டும் தாய்மார்களுக்கு 2022 செப்டம்பர், ஒக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் ஆகிய நான்கு மாதங்களுக்குமாக 10,000 ரூபா உதவித் தொகை வழங்கப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம். அன்சாரின் வழிகாட்டலில் சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் எம்.பீ.எம். ஹூஸைன் தலைமையில், இந்நிகழ்வு இடம்பெற்றது.

அக்கரைப்பற்று கிழக்கு வங்கியில் நடந்த இந்நிகழ்வில், அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம். எம்.அன்சார், உதவிப் பிரதேச செயலாளர் றாசித் எஹியா, சமுர்த்தி வங்கி முகாமையாளர் யூ.கே. எம்.நழீம், முகாமைத்துவ பணிப்பாளர் எம்.ஜே.எம். நிஃமத்துள்ளா, திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அக்கரைப்பற்று கிழக்கு வங்கியில் 375 தாய்மார்களும், அக்கரைப்பற்று மேற்கு வங்கியில் 332 தாய்மார்களுக்குமாக மொத்தமாக 707 பேருக்கு 10,000 ரூபா வீதம் பணம் வழங்கப்பட்டது. இதன்போது விடய பொறுப்பு உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தாய்ப்பாலூட்டும் தாய்மார்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

## வறுமையில் வாழும் குடும்பத்தினருக்கு உணவுப் பொதிகள், புத்தகங்கள்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

வறுமைக்கோட்டில் வாழும் மூவின மக்களுக்கும் உலருணவுப்பொருட்கள் மற்றும் அவர்களது. பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும்நிகழ்வு புதன்கிழமை (5)அக்கரைப்பற்று ஸ்ரீ விஜயராம பௌத்த விகாரையில் நடைபெற்றது. அனைத்து இலங்கை தொழில் முறை புகைப்பட ஸ்டுடியோ சங்கத்தினர் இதை, செய்திருந்தனர்.



சங்கத்தின் பொதுச்செயலாளர் டிக்க்ஷன் அபேசிங்க தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வு. நாதன்ஸ் அட்வான்ஸ் ஸ்டுடியோ உரிமையாளரும் அமைப்பின் பிரதிச் செயலாளருமான ஆர்.பிரகாஷ்ஷின் பூரண அனுசரனையோடு அம்பாறை மட்டக்களப்பு மாவட்ட பிரதம சங்க நாயக்கவும் அக்கரைப்பற்று ஸ்ரீ விஜயராம பௌத்த விகாரை பீடாதிபதியுமான வண.தேவகோட சோரத தேரோ முன்னிலையில் நடைபெற்றது. மல்வத்தை இராணுவப்பிரிவின் இருபத்தினான்காவது காலாட் படைப்பிரிவின் மேஜர் ஜெனரல் விபுல சந்திரசிறி இதில், பிரதம அதியாக கலந்து கொண்டார்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஏப்ரல் மாதம் 10ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.